Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 286

வெள்ளிக்கிழமை 08 செப்ரெம்பர் 2023

ஆவணி 22 ஆம் நாள் – வள்ளுவர்



கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வில்

## பச்சை சீருடையுடன் எலும்புக் கூடுகள் மீட்பு

உலோகக்கூறுகளும் கிடைத்தன
துப்பாக்கிச் சன்னங்கள் எனச் சந்தேகம்



வவுனியா, செப்ரெம்பர் 8

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் நேற்று மேற்கொள்ளப்பட்ட அகழ்வின்போது, பச்சை உடையுடன் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் துப்பாக்கிச் சன்னங்கள் என்று சந்தேகிக்கப்படும் உலோகப்பொருள்கள் மற்றும் அதுசார் கூறுகளும் மீட்கப்பட்டன.

»15

உயிரிழந்த சிறுமியின்

## புதைக்கப்பட்ட சடலம் மாயம்

»15

வவுனியாவில் அதிர்ச்சி!

தாதியரின் தவறால் கையிழந்த சிறுமி

## நீதிவழங்குமாறு கோரி உறவினர் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 8
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக சேர்க்கப்பட்ட 7 வயதுச் சிறுமிக்கு கை அகற்

»15

## சிறுமியின் கை அகற்றல்; தாதிக்குப் பயணத்தடை!

*யாழ். நீதிவான் நீதிமன்று கட்டளை*

யாழ்ப்பாணம், செப். 8
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாகச் சேர்க்கப்பட்ட 8 வயதேயான சிறுமிக்கு

»15

## கையை அகற்றியது ஏன்? விசாரிக்க மருத்துவக்குழு

*நீதிவான் ஆனந்தராஜா உத்தரவு*

யாழ்ப்பாணம், செப். 8
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக

»15

## சுய பிரபல்யத்துக்காகவே 'சனல் 4 செயற்படுகின்றதாம்

*விஜயதாஸவின் வியாக்கியானம்*

கொழும்பு, செப். 8
டயஸ்போராக்களுடன் நெருங்கி செயற்படும் நிறுவனம்தான் 'சனல் - 4' ஊடகம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை பெற்றுக்கொடுப்பதற்

»14

வவுனியா இரட்டைக் கொலை

## மூவருக்கு எதிராக மன்று பிடியாணை

வவுனியா, செப். 8
வவுனியா, தோணிக்கல் பகுதியில் இடம்பெற்ற இரட்டை கொலைச் சம்பவம் தொடர்பில், தேடப்பட்டு

»15

## 33 கிராம் ஹெரோய்னுடன் யாழ்.நகரில் ஒருவர் கைது

*விநியோக வலைப்பின்னலுடன் தொடர்புடையவர்*

யாழ்ப்பாணம், செப். 8
33 கிராம் ஹெரோய்னுடன் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் வைத்து நபரொருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்

»15

பிரிட்டன் தூதரகத்துக்கு முன்பாக

## 'சனல் – 4'க்கு எதிராக பிக்குகள் போராட்டம்

கொழும்பு, செப். 8
'சனல் - 4' ஊடகத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி பௌத்த

»14

## சிறார்களை 'ஐஸ்' போதைக்கு அடிமையாக்கும் குழு சிக்கியது

- பெண் உள்ளிட்ட நால்வர் கைது
- பொலிஸார் நேற்று அதிரடி!

யாழ்ப்பாணம், செப். 8
யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் சிறார்களையும், மாணவர்களையும், பதின்ம வயதினரையும் இலக்குவைத்து அவர்களி

»14

போதைக்கு அடிமை

## அலைபேசிகளை திருடிய பல்கலைக்கழக மாணவர்கள்

யாழ்ப்பாணம், செப். 8
யாழ்ப்பாணம் - திருநெல்வேலிப் பகுதியில் அலைபேசிகளைத் திருடிய குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ்

»14



## 'சனல் -4' வீடியோ பச்சைப் பொய்!

கொதிக்கிறார் கோத்தா

கொழும்பு, செப். 8
ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் பிரிட்டனின் 'சனல் -4 'ஊடக நிறுவனம் வீடியோ ஒன்றை வெளியிட்டு முன்வைத்துள்ள குற்

»14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியார் கொள்ளுப்பேரன் யாழ்ப்பாணத்துக்கு வருகை



யாழ்ப்பாணம், செப். 8

மஹாகவி பாரதியாரின் கொள்ளுப்பேரன் கலாநிதி ராஜ்குமார் பாரதி யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

அவருக்கான வரவேற்பு வைபவம் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று வியாழக் கிழமை கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ராஜ்குமார் பாரதிக்கு யாழ்ப்பாண வருகையை அடையாளப்படுத்தும் நினைவுச் சின்னத்தை வழங்கி கலாசாலை அதிபர், பிரதி அதிபர்கள் உள்ளிட்ட சமூகத்தினர் கௌரவித்தனர். அதிதி அறிமுக உரையை விரிவுரையாளர் கு.பாலசண்முகம் ஆற்றினார்.

பாரதியாரின் கொள்ளுப்பேரன் ராஜ்குமார் பாரதி, மஹாகவியின் வாழ்க்கை வரலாற்றில் இடம்பெற்ற சுவாரஸ்யமான நிகழ்வுகளை பாடலாகவும் கதைகளாகவும் கூறி மீட்டினார். (ச-இ)

# வியாபாரமாகிறது யாசகம் தடுப்பதற்கு விசேட திட்டம்



## மகளிர், சிறுவர் சமூக வலுப்படுத்தல் அமைச்சுசார் கூட்டத்தில் ஆராய்வு

**கொழும்பு, செப். 8**

**வியாபார நோக்கம் கருதி பெண்கள் மற்றும் சிறுவர்களை யாசகத்துக்காகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு விசேட திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அதற்கென தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பூர்வாங்க கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்தார்.**

அண்மையில் கூடிய மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

யாசகம் செய்வதற்கு சிறுவர்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்வது, சில சிறுவர்களுக்குப் போதை மாத்திரைகளை வழங்கி அவர்களை யாசகத்துக்கு அனுப்புதல், பெண்களைப் போலியான கர்ப்பிணிகளாகக் காண்பித்து யாசகம் செய்யவைத்தல் போன்ற சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன. யாசகம் செய்வது வியாபாரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது எனக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய அவற்றைத் தடுப்பதற்கு சட்டரீதியாக உரிய செயற்பாடுகளை முன்னெடுப்பதில் நடைமுறை மட்டத்தில் காணப்படும் சிக்கல்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதன்போது நாட்டிலுள்ள யாசகர்கள் தொடர்பில் சமூக சேவைகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள கணக்கெடுப்புடன் தொடர்புகளை ஏற்படுத்தி உரிய தரவுகளைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இதனைத் தடுப்பதற்கு விசேட திட்டமொன்றை நடைமுறைத்துங்கள் என்று இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். (ச-இ)

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலையில்

# இரும்பு திருட முயன்ற ஆறுபேர் கைதாகினர்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் இரும்பு திருட முற்பட்ட ஆறு பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நல்லிணக்கபுரம் - தையிட்டிப் பகுதியைச் சேர்ந்த ஆறுபேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-26)



# மரக்குற்றிகளுடன் ஒருவர் கைது!

மானிப்பாய், செப். 8

யாழ்ப்பாண பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினரின் தகவலின் அடிப்படையில் அனுமதிப்பத்திரம் இன்றி வேப்ப மரக் குற்றிகளை வாகனத்தில் ஏற்றிச் சென்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் புதன்கிழமை மானிப்பாய் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரக்குற்றிகள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் ஏற்றிச் சென்ற வாகனத்தையும் சந்தேகநபரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ-ரி2-23)

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட செல்வம் எம்.பி.க்குப் பிணை

## பொலிஸாரிடம் இரு மணி நேரம் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், செப்.8

கடந்த சுதந்திர தினத்தன்று எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட பேரணியில் பங்கேற்றனர் என்று குற்றஞ்சாட்டிப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கில் முன்னிலையாகாதமையால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் அவரிடம் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் பொலிஸாரால் வாக்குமூலமும் பெறப்பட்டுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இருந்து ஆரம்பமாகி நடத்தப்பட்ட பேரணியில் பங்கேற்றனர் என்று தெரிவித்து தமிழ் அரசியல் பிரமுகர்கள் மற்றும் சிலர் மீது யாழ்ப்பாணம் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். இந்த வழக்குக் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அழைக்கப்பட்டது.

அன்றையதினம் நீதிமன்றில் முன்னிலையாகாதவர்களுக்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவரான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சிரேஷ்ட சட்டத்தரணி என். சிறீகாந்தா ஊடாக நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

அவரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கு பிணை அனுமதி வழங்கியது. ரெலோ அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தியாகராஜா நிரோஷ் பிணை ஒப்பமிட்டார். (ச-26)

# வடக்கை வலுப்படுத்த ஐ.நா. கரம் கொடுக்கும்!

## அதன் வதிவிடப் பிரதிநிதி ஆளுநரிடம் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப். 8

வடக்கு மாகாணத்தில் சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்கும் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கும் ஐக்கிய நாடுகள் அமைப்பு தொடர்ந்தும் பூரண ஆதரவை வழங்கும் என்று யாழ்ப்பாணம் வருகைதந்துள்ள ஐக்கியநாடுகள் அமைப்பின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்றூ பிரான்ச் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸை கடந்த செவ்வாய்க்கிழமை வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

சந்திப்பில், வடக்கு மாகாணத்தின் தற்போது நிலைமைகள் மற்றும் வளர்ச்சி தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தெளிவுபடுத்தினார்.

இந்த வளர்ச்சியின் இலக்குகளின் அடித்தளத்தை வலுப்படுத்த எதிர்காலத்தில் பூரண ஆதரவை ஐக்கிய நாடுகள் சபை வழங்கும் என்று ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி குறிப்பிட்டார். கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல உள்ளிட்ட குழுவினரும் பங்கேற்றனர். (ச-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




நேர்ஸ்மார் விட்ட பிழையால ஒரு சின்னப் பிள்ளையின்ர கையை மணிக்கட்டோட வெட்டினதோட, பெரியாஸ்பத்திரியில நேர்ஸ்மாரின்ர கொட்டமெல்லாத்தையும் சனங்கள் பேஸ்புக்கில கொட்டித் தீர்க்குதுகள். அந்தளவுக்கு இவ்வளவுநாளும் சனங்கள் மனதுக்குள்ள கடும் வெப்பியாரமா இருந்திருக்குதுகள்.

கூடுதலா பிரசவ வார்ட்டிலதான், நேர்ஸ்மார் எந்தநேரமும் சுடுதண்ணி குடிச்ச சூர்ப்பனகை மாதிரி எரிஞ்சு விழுந்தபடி இருப்பினமெண்டு முந்திச் சொல்லுறவ. ஆனால் இப்ப சனங்கள் கொட்டுற கதையளைப் பார்த்தா, எல்லா வார்ட்டிலையும் குறைஞ்சது ஒரு சூர்ப்பனகையாவது நேர்ஸா இருப்பா போல. நேர்ஸ்மாருக்கும் வேலைகூடத்தான். இரவு பகல் டியூட்டி பாக்கோணும். அதோட வீட்டுப் பிரச்சினையளும் இருக்கும். அவையும் மனிசர் எண்டதால அதெல்லாம் வேலையில தாக்கம் செலுத்தும்தான். ஆனால் அதுக்காக நோயாளியளோடையும், அவையைப் பராமரிக்கிறவையோடையும் எந்தநேரமும் 'வள்சுள்ளெண்டு' பாய்ஞ்சா, எப்பிடி ஆஸ்பத்திரிக்குப்போக மனம்வரும்? அதாலதான் சிலசனங்கள் 'வீட்ட இருந்து செத்தாலும் பரவாயில்லை, உந்தக் கோதாரி விழுந்த கொஸ்பிட்டலுக்குப் போய் நேர்ஸ்மாரிட்ட ஏச்சுவாங்கிச் சாகேலாது' எண்டு சொல்லுறவைபோல.

கிட்டடியில ஒரு சம்பவம். வயதுபோன பொம்பிளை ஒராளுக்கு காலில அடிபட்டு, பெரியாஸ்பத்திரியில சேர்த்தவை. அங்க எப்ப பார்த்தாலும், நேர்ஸ்மாருக்கு எல்லாமே சொல்லித்தான் செய்யவேண்டியிருந்திருக்கு. அவாவுக்கு 'சலைன்' ஏத்துறதில இருந்து, மருந்து கட்டுறதுவரைக்கும் எல்லாமே ஒராள் போய் நேர்ஸ்மாருக்கு நினைவுபடுத்தோணும். இல்லாட்டி எட்டியும் பாக்கமாட்டினம். 6 மணிக்கு வந்த டொக்டர், உடன போடச்சொன்ன ஊசியை 9 மணிக்குப் பிறகுதான், அதுவும் நோயாளியைப் பராமரிக்கிறவை நாலைஞ்சுதரம் கெஞ்சிக் கூத்தாடின பிறகுதான் போட்டிருக்கினம். இப்பிடிக் கவனிப்பில்லாமல் இருந்தவாவுக்கு, காலில இருந்த காயம் இன்பெக்சன் ஆக்கி, செத்தும் போட்டா. கிட்டத்தட்ட 10 நாளுக்கும் மேல ஹொஸ்பிட்டலில இருந்தவாக்கு, காயம் இன்பெக்சன் ஆக்கிச் சாகிற வரைக்கும் இவை என்ன செய்துகொண்டிருந்தவை எண்டு, செத்துப் போனவாவின்ர வீட்டுக்காரர் மண்ணள்ளித் திட்டிப்போட்டுத்தான் போனவையாம். இதெல்லாம் நேர்ஸ்மாரின்ர அக்கறையில்லாத்தனத்துக்கும், அதிகாரத்தனத்துக்கும் ஒரு சின்ன உதாரணம்தான்.

பெரியாஸ்பத்திரியில மட்டும் தான் நேர்ஸ்மாருக்கு இந்தக் குணமில்லை. எல்லா ஆஸ்பத்திரியளிலயும் இப்பிடித்தான் கனபேர் இருக்கினம். வலிகாமத்தில உள்ள ஆதார மருத்துவமனை ஒண்டில, எமெர் ஜென்சி வார்ட்டில (அவசர சிகிச்சைப் பிரிவு) நிக்கிற நேர்ஸ்மார் நோயாளியைப் பாக்கிறதைவிட, செல்போனைப் பாக்கிறதிலதான் அக்கறைகூட. போன் பாக்கிற பிராதியில அவையைப் போய் ஏதும் கேட்டாலும் கோபம் பொத்துக்கொண்டு வந்திடுமாம். 'சும்மா உதுகள் நிம்மதியாப் போன் பாக்கவும் விடாதுகளாம்' எண்டு புறுபுறுத்தபடிதான் வருவினமாம். அப்பிடி நிம்மதியாப் பாக்கவேணும் எண்டால், வேலையை விட்டிட்டு வீட்டில நிண்டு பாக்கலாம் தானே. விளக்கேந்தின பெருமாட்டி எண்டு சொல்லுற நைட்டிங்கேள் தொடங்கின இந்தப் புனிதப்பணியை, இப்ப உள்ள நேர்ஸ்மார் சிலர் 'கெடுக்கிறன் பார், பந்தயம் பிடி' எண்டு நிக்கிறதை எங்கபோய்ச் சொல்லியழ?

குறிப்பு: எல்லா நேர்ஸ்மாரும் இப்பிடியில்லைத்தான். கடவுள் மாதிரி கருணையோட சேவை செய்யிற நேர்ஸ்மாரும் கனபேர் இருக்கினம்.
அதால தொப்பி அளவானவை மட்டும் இதில் சொன்ன விசயங்களை கொஞ்சம் கவனத்தில எடுத்து மாறப் பாருங்கோ.



\- புசி

# தெய்வீக திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், செப். 8

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் தெய்வீக திருக்கூட்டத் தொடர் 19ஆம் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நாகபூஷணி அம்மன் குரு சிவஸ்ரீ வாமதேவ குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்டச் செயலக பிரதம பொறியியலாளர் கதிர்காமர் திருக்குமார் கலந்துகொள்ளவுள்ளார். 'யாமிருக்க பயமேன்' மற்றும் 'மனிதவிழுமியங்கள்' எனும் தலைப்புகளில் சிறப்புரைகள் இடம்பெறவுள்ளதோடு அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை மற்றும் நடன நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ஒ-ரி2)

# கிருஷ்ண ஜெயந்தி

யாழ்ப்பாணம், செப். 8

கிருஷ்ணர்பிறப்பை முன்னிட்டு யாழ்ப்பாணத்திலுள்ள கிருஷ்ணர் ஆலயங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை நள்ளிரவு கிருஷ்ண ஜெயந்தி உற்சவ ஆராதனைகள் இடம்பெற்றன.

வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வர வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் கிருஷ்ண பகவானுக்கு விஷேட அபிஷேக ஆராதனையைத் தொடர்ந்து தீப பூஜை இடம்பெற்றது. உற்சவ கிரியைகள் ஆலய பிரதம குரு இ.ரமணிதரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றது.

கிருஷ்ண ஜெயந்தி உற்சவத்தில் பக்த அடியார்கள் பங்கேற்று இஷ்ட சித்திகளைப் பெற்றனர். (ச-27)

# ஊரெழு கணேச வித்தி. பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஊரெழு கணேச வித்தியாசாலை பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் பங்கேற்கவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக்கல்வி அலுவலர் நா.சிவனேசன், பழைய மாணவர்களான சி.சிவராசா, து.துஷ்யந்தன் ஆகியோரும் கௌரவ விருந்தினர் களாக ஊரெழு கிராம அலுவலர் ம.ஞானேந்திரன், ஊரெழு பொதுச் சுகாதார உத்தியோகத்தர் வீ.துவாரகன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைவடைகிறது டெங்குத் தாக்கம்

யாழ்.சுகாதாரப் பிரிவு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்.மாநகர பிரதேசங்களில் டெங்கின் தாக்கம் தற்போது குறைவடைந்துள்ளது என யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய வறட்சிநிலை மற்றும் அதிகரித்த வெப்பம் உள்ளிட்ட கால நிலை வேறுபாட்டால் நுளம்புகளின் பெருக்கம் குறைவடைந்துள்ளது. அதன் காரணமாக டெங்கால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கையும் குறைவாகப் பதிவாகின்றது.

கடந்த ஜூன் மாதத்தில் 9 பேரும் ஜூலை மாதத்தில் 5 பேரும், ஓகஸ்ட் மாதம் 10 பேருமே டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் டெங்கு விழிப்புணர்வு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன என்று யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு மேலும் குறிப்பிட்டது. (ச-17)

# போதையிலிருந்து மீட்சி; கைகொடுக்க நாம் தயார்

ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை யாழ்.இணைப்பாளர் தெரிவிப்பு

மன்னார், செப். 8

போதைப்பொருள்களுக்கு அடிமையானவர்கள் அதிலிருந்து மீட்சியுற அவர்களுக்கான புனர்வாழ்வு மற்றும் சிகிச்சைகள் எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கென 1927 இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த இலக்கத்துக்கு அழைத்தால் உதவிகள்புரிய நாம் தயார் - இவ்வாறு தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையின் யாழ். மாவட்டத்தின் இணைப்பாளர் திருமதி சியாமினா அஜன்தன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்; நாட்டில் தற்போது சிறுவர்கள் தொடக்கம் பெரியோர் வரை போதைப்பொருள்களுக்கு அடிமையாகி வருகின்றனர்.

போதைப்பொருளுக்கு அடிமையான நபரின் மீட்சியின் வெற்றி பெரும்பாலும் அவரது உள் உந்துதலில் ஏற்படுத்தப்படவேண்டும். தற்போதைய நிலையில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எங்கே செல்வது என்றே தெரியாதுள்ளனர்.

இவர்களுக்காகத் தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை 1927 என்ற இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த இலக்கத்துக்கு அழைக்கும் போது அவர்களுக்கான உதவிகளைச் செய்யத் தயார் நிலையில் தேசிய அபாயகரமான ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபை இருக்கிறது.

போதைப்பொருள்களுக்கு அடிமையானோருக்கு புனர்வாழ்வும் சிகிச்சையும் அளிக்க ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகாரசபையால் இலங்கையில் 4 நிலையங்கள் அமைக்கப்பட்டு சேவை வழங்கப்படுகிறது - என்றார். (ச-60)

## கண்புரையாளர் தெரிவு முகாம்

யாழ்ப்பாணம், செப்.8

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய பகுதிகளில் கண்புரை சத்திர சிகிச்சை செய்யவேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவுசெய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்டவர்களுக்கு குருநகர் பிரதேச மருத்துவமனையிலும், நல்லூர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக் குட்பட்டவர்களுக்கு மஞ்சவனப்பதி ஆலய திருமண மண்டபத்திலும் பரிசோதனைகள் நடைபெறவுள்ளன. (ஏ-ரி2-100)

## கோவில்சந்தை சீரமைப்பு ஆளுநரால் அடிக்கல்

யாழ்ப்பாணம், செப். 8

வடமராட்சி தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட கோவில் சந்தை புனரமைப்புக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. வடமராட்சி தென்மேற்குப் பிரதேசசபை செயலாளர் க.கம்ஸநாதன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பங்கேற்று அடிக்கல்லை நட்டுவைத்தார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-100)

## சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும்

சமூக அமைப்பு பிரதிநிதிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 8

கல்வியங்காட்டுச் சந்திக்கு அருகாமையிலுள்ள தனியார் காணி ஒன்றில் தொடர்ச்சியாக இனந்தெரியாதோர் குப்பைகளை கொட்டுவதால் குறித்த பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்படுகின்றது.

இதனால் மக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகின்றனர் என சமூக அமைப்பு பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நல்லூர் பிரதேசசபைக்குட்பட்ட குறித்த பகுதியில் தொடர்ச்சியாக அசுத்த கழிவுகள், குப்பைகள் என்பன கொட்டப்படுவதைத் தடுத்து நிறுத்தி சூழலைப் பாதுகாத்து அழகாக வைத்திருக்க நல்லூர் பிரதேசசபை செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-ரி-2)



## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**இடபம்:** உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் கடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள். பணிச்சுமை காரணமாக உடல்அசதி உண்டாகும். விவாதங்கள் வேண்டாம்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** மகிழ்ச்சியான நாளாக அமையும். காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியும் உற்சாகமும் பெறுவீர்கள்.

**சிம்மம்:** முயற்சிக்கு ஆதரவு கிடைக்கும். உறவுகளிடம்எதிர்பார்த்தஉதவிகிடைக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**கன்னி:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். திடீர் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். மற்றவர்களின் தேவைக்காகப் பாடுபடுவீர்கள். உறவினர் வருகை உற்சாகம் தரும்.

**விருச்சிகம்:** சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படும் நாள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சகோதரர்களால் செலவுகள் ஏற்படும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்தநாள். ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மீனம்:** புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது.

# ஆங்கில தினப் போட்டியில்; புதுக்குளம் மாணவி சாதனை



வவுனியா, செப். 8

வடக்கு மாகாண ஆங்கில தினப் போட்டியில் முதல்முறையாக வவுனியா வடக்கு வலய மாணவி முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆங்கில தினப் போட்டிகள் நடைபெற்று அதன் முடிவுகள் கடந்த 4ஆம் திகதி வெளியாகின.

ஆங்கிலக் கட்டுரை எழுதுதல் போட்டியில் வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த புதுக்குளம் மகா வித்தியாலய தரம் - 12 மாணவி கி.கிருசாளினி மாகாணத்தில் முதலிடம் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

வவுனியா வடக்கு வலய மாணவி ஒருவர் ஆங்கில தினப் போட்டி ஒன்றில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெறுவது இதுவே முதல் முறை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி2-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## மீளநிகழாமையை உறுதிசெய்க

நல்லிணக்கம், நிரந்தர சமாதானம் என்பன ஏற்பட வேண்டுமானால் மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படவேண்டும். ஆனால், இலங்கையில் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிக்கும்போக்கே தொடர்கின்றது. அரசியல் ரீதியான படுகொலைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களிலிருந்தும் குற்றவாளிகள் தப்பிக்கும்போக்கை அரசாங்கங்களே மாறி மாறி ஊக்குவிக்கின்றன. அவர்களின் தேவைகளுக்காக நீதியை நிலைநாட்டுவது போன்ற முயற்சியை எடுப்பதும் ஆட்சி மாற்றங்களின் பின்னர் பழிவாங்குவதும் என்று ஒரே அரைத்தமாவையே திரும்பத்திரும்ப அரைக்கிறார்கள். இன்றளவு காலமும் தமிழர்களுக்கு எதிராகவே இந்தக் கொடூரம் நடந்து கொண்டிருந்தது. நாட்டில் எண்ணிக்கையில் பெரும்பான்மையான சிங்களவர்களுக்கு இதன் வலி – கொடூரம் புரியவில்லை.

இறுதிக்கட்டப்போரின்போது சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தாராளமாகவே இடம்பெற்றன. அதற்கான ஆதாரங்கள் பரவிக்கிடக்கின்றன. இனப்படுகொலையை இலங்கை அரசாங்கமே இறுதிப்போரில் அரங்கேற்றியது. அதேகாலப் பகுதியில் தமிழர்கள் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவங்களும் பதிவாகின. ஊடகங்கள் மீதான அடக்குமுறையும் ஏவிவிடப்பட்டிருந்தது. இவை எல்லாவற்றிலும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் மாத்திரமே அல்லது தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த சிங்களவர்களும் பழிவாங்கப்பட்டார்கள். இவ்வாறு நடந்த எவற்றுக்கும் நீதி நிலைநாட்டப்படவில்லை. இறுதிப்போரில் இனப்படுகொலைக்கு கட்டளை பிறப்பித்த அரசாங்கமே எப்படி அது தொடர்பில் விசாரிக்க முடியும் ? என்ற இயற்கை நீதியின் அடிப்படையை வைத்து தமிழர்கள் கேள்வி எழுப்பினர். அரசாங்கத்தின் நிறுவனங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை. மகாவம்சப் புனைவை நம்பி சிங்கள– பௌத்த பேரினவாதத்தால் அந்த நிறுவனங்கள் நெறிப்படுத்தப்பட்டவை. நீதிபதி மீதான குற்றச்சாட்டை அதே நீதிபதியே விசாரிப்பதுபோன்று இனப்படுகொலை மற்றும் அதற்குச் சமாந்தரமான அனைத்து விடயங்களையும் இலங்கை அரசாங்கத்தின் எந்தவொரு விசாரணைப் பொறிமுறையும் நீதியாக விசாரணைக்குட்படுத்தாது. இயற்கை நீதிக் கோட்பாட்டுக்கு அமைவாக வெளித் தரப்பு – சுயாதீனத் தரப்பே அதனை விசாரணைக்குட்படுத்த முடியும். அதனாலேயே தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையைக் கோரி நின்றனர் – நிற்கின்றனர்.

இப்போது தென்னிலங்கையில் ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் சனல்– 4 வெளியிட்ட காணொலி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. அதுதொடர்பில் பல்வேறு வாதங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. சர்வதேச விசாரணை தேவை என்ற வலுவான குரல் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை முதற் கொண்டு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வரை எழுப்பப்படுகின்றது. சனல்– 4 காணொலி, ஈஸ்டர் தாக்குதல் ராஜபக்சக்கள் அதிகாரத்துக்கு வருவதற்காகவே நடத்தப்பட்டதாகக் கூறுகின்றது. ஆனால், இப்போதும் ராஜபக்சக்களின் அரசாங்கமே ஆட்சியிலிருக்கும் நிலையில் அவர்கள் நீதியான விசாரணையை முன்னெடுக்கமாட்டார்கள் என்பது வெளிப்படை. இந்த நாட்டில் இனவாதம் என்ற முதலீட்டை வைத்தே தென்னிலங்கையில் ஆட்சியைப் பிடிப்பது வழமை. ஆனால், ராஜபக்சக்களைப் பொறுத்தவரை இந்த நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடியவர்கள் தாமே என்பதையும் இனவாதத்தையும் சேர்த்து விதைத்து ஆட்சிக்கு வந்ததாகவே சனல் – 4 கூறுகின்றது. மக்கள் அதை முழுமையாக நம்புவதற்கும் காரணம் உண்டு. கடந்த காலச் சம்பவங்களின் தொகுப்பு அதனை எடுத்துக்காட்டுகின்றது. இந்த இடத்தில்தான் தண்டனையிலிருந்து தப்பிக்கும் மோசமான போக்கின் ஆபத்தை தென்னிலங்கை மக்கள் உணரவேண்டும். ஆட்சிக்கு வருவதற்காக மக்களைக் கொல்லும் கலாசாரத்தை அனுமதித்தால் – குற்றவாளிகளைத் தண்டிக்காமல் விட்டால் மீண்டுமொருமுறை அது நடந்தேற வாய்ப்புண்டு, அதற்கு இடமளிக்கக்கூடாது. தமிழ் மக்களும் இன்னொருமுறை தம்மீது இனப்படுகொலை ஏவிவிடப்படக்கூடாது என்பதற்காகவே இறுதிப்போர் தொடர்பில் சர்வதேச விசாரணையைக் கோருகின்றனர். எனவே மீள நிகழாமையை உறுதிப்படுத்துவதற்காகவும், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிக்கும்போக்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவும் சர்வதேச விசாரணை இரு தரப்புக்கும் அவசியம். இரு தரப்பும் ஒன்றிணைந்து குரல் எழுப்புவது காலத்தின் தேவையும்கூட.

### நாளொரு நல்வார்த்தை

சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.

-அப்துல் கலாம்




# பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை தொடர்ந்து தோல்வி

## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சுட்டிக்காட்டு

**கொழும்பு, செப்.8**

**பொறுப்புக்கூறல்களை நிறைவேற்றுவதிலிருந்து இலங்கை தொடர்ந்தும் தவறிவருகின்றது என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தெரிவித்துள்ளார். ஆணையாளர் வெளியிட்டுள்ள வருடாந்த அறிக்கையில் இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

போர்க்குற்றங்கள், அண்மைய மனித உரிமை மீறல்கள், ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றின் மூலம் பொறுப்புக்கூறல்கள் மீறப்பட்டுள்ளமை நன்கு புலப்படுவதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாடு முன்னோக்கிச் செல்வதற்கு இந்த விடயங்கள் பெரும் தடையாக இருப்பதாகவும், அது தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்தப்படவேண்டும் என்று மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:-

போர் முடிவடைந்து 14 வருடங்களாகியும் அதனூடாகப் பாதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் உண்மை, நீதி மற்றும் தீர்வு கிடைப்பதில்லை. மாறாக அவர்கள் வேதனைகளை அனுபவித்து வருகின்றனர். அரசாங்கம் ஒரு புதிய உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை முன்மொழிந்துள்ளது.

இந்தப் பொறிமுறையின் ஊடாக உண்மையைத் தேடுவது மட்டுமன்றிப் பொறுப்புக்கூறலுக்கான தெளிவான, அர்ப்பணிப்பு மற்றும் தொலைநோக்கு மாற்றத்தைச் செயற்படுத்துவதற்கான அரசியல் விருப்பத்துடன் இருக்கவேண்டும் - என்றார். (எ-இ)

# நாமலுக்கு நெத்தியடி

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பான ஆவணப் படத்தை சனல்-4 நீக்கியுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், மஹிந்த ராஜபக்சவின் மகனுமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளபோதும், அந்தக் காணொலி அகற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்டர் தாக்குதல் ஆவணப் படத்தைத் தொகுத்த பேஸ்மென்ட் பிலிம்ஸின் நிறுவுநர் பென் டி பியர், "காணொலி இன்னும் சனல் - 4 இல் உள்ளது" என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலக செயற்பாட்டில் முன்னேற்றமில்லை!

## ஐக்கிய நாடுகள் பணிக்குழு அதிருப்தி

கொழும்பு, செப்.8

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்கள் அவர்களது அன்புக்குரியவர்களைத் தேடிக்கண்டறிவதற்கு உதவுதல் மற்றும் உண்மையை வெளிப்படுத்தல் ஆகிய ஆணைகளைச் செயற்படுத்துவதில் காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தால் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே அடையப்பட்டுள்ளது.

- இவ்வாறு வலிந்து காணாமலாக்கப்பல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பணிக்குழு அதிருப்தி வெளியிட்டுள்ளதுடன், இது பாதிக்கப்பட்ட தரப்பினர் நம்பிக்கை இழப்பதற்கு வழிவகுத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. (எ-இ)

**நாளை** 09.09.2023 சனிக்கிழமை ஆவணி 23

சுபநேரம் : 03.04 – 04.34
ராகுகாலம் : 09.04 – 10.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்படுத்தாத பாடசாலை விடுதிகளை வகுப்பறைகளாக மாற்றக் கோரிக்கை!

கிளிநொச்சி, செப். 8

**கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள விடுதிகள் பல பயன்படுத்தப்படாமல் இருப்பது தொடர்பாக வலயக் கல்விப் பணி மனைகளில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

கடந்த 2010ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் பெருமளவு நிதியில் விடுதிகள் திருத்தப்பட்டதுடன் புதிதாகவும் பல விடுதிகள் அமைக்கப்பட்டன. பெருமளவு ஆசிரியர்கள் மாவட்டத்துக்கு வருகை தருவதன் காரணமாகவே இந்த விடுதிகள் அமைக்கப்பட்டன. ஆனால், தற்போது பல பாடசாலைகளில் விடுதிகள் மூடிக் கிடப்பதன் காரணமாக விடுதிகள் சேதமடைந்து வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளிலே இடநெருக்கடி பிரதான பங்கு வகிக்கின்றமையால் பாடசாலை நிர்வாகம் குறித்த விடுதிகளை ஆசிரியர்களின் பயன்பாட்டுக்கு அல்லது சங்கீதம், நடனம் போன்ற பாடங்களின் வகுப்பறைகளாகப் பயன்படுத்த வேண்டும். இதுதொடர்பாக கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஓ-ரி2-13)



## ஹோட்டல் பொருள்கள் 'அபேஸ்' சந்தேகநபர்கள் கைதாகினர்

மன்னார், செப். 8

ஹோட்டல் ஒன்றில் திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் ஹோட்டல் ஒன்றில் சுமார் 5 இலட்சம் பெறுமதியான குளியலறை உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன என உரிமையாளரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது.

விசாரணையில் மன்னார் - தாழ்வுப்பாடு மற்றும் புத்தளம் பகுதிகளைச் சேர்ந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து களவாடப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் மன்னார் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-56)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், செப். 8

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை மறுதினம் 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பாடசாலையின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி முதல்வர் சி.திரிதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமத்திய நீர்ப்பாசன விவசாயத் திட்ட சிரேஷ்ட பொறியியலாளர் எந்திரி கு. சிவபாலசுந்தரம், சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)



## யாழில் பல்வேறு தரப்பினருடன் ஐ.நா. பிரதிநிதி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு கடந்த திங்கட்கிழமை வருகை தந்த ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மார்க் ஆண்ட்ரே பிராஞ், பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புகளை மேற்கொண்டு கலந்துரையாடியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகத்தில் யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரனுடன் கலந்துரையாடினார்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் விரிவாகக் கேட்டறிந்தார். கலந்துரையாடலில் மேலதிக மாவட்டச் செயலர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலர், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் ஐக்கிய நாடுகளின் வதிவிட அதிகாரிகள் ஆகியோர் பங்கேற்றனர்.

பின்னர் யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் சென்ற ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதி, பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராஜாவைச் சந்தித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டைக்கும் சென்றிருந்த ஐக்கிய நாடுகளின் வதிவிடப்பிரதிநிதி, அங்கிருந்து யாழ்ப்பாண நகரத்தின் அழகை ரசித்தார். (ச-26, 27)

## நாட்டுத் துப்பாக்கி தயாரித்தவர் கைது

முல்லைத்தீவு செப். 8

முல்லைத்தீவு - கேப்பாபிலவில் சட்டவிரோதமாக நாட்டு துப்பாக்கி தயாரித்த குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என முல்லைத்தீவு பொலிஸ் புலனாய்வாளர்கள் தெரிவித்தனர்.

கேப்பாபிலவு - சூரிபுரம் பகுதியில் வீடு ஒன்றில் சட்டவிரோத நாட்டுத் துப்பாக்கி தயாரிக்கப்பட்டு வருகிறது என கிடைத்த தகவலுக்கமைய 36 வயதுடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

இந்தக் கைது கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது. சந்தேகநபரிடமிருந்து தயாரிக்கப்பட்ட துப்பாக்கிளின் உதிரிப்பாகங்கள் மீட்கப்பட்டன.

சந்தேகநபர் சான்றுப்பொருள்களுடன் சட்டநடவடிக்கைக்காக முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ச-19)

## கைகலப்பில் இருவர் காயம்

சாவகச்சேரி, செப்.8

வாக்குவாதம் கைகலப்பாக மாறியதில் இருவர் காயமடைந்தனர். காயமடைந்த ஓட்டோச் சாரதியான ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தனிப்பட்ட முரண்பாடு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதம் மோதலாக மாறியுள்ளது. அதில் மோசமாகத் தாக்கப்பட்ட ஓட்டோச் சாரதியும் மற்றொருவரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். ஓட்டோச் சாரதி மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஏ-ரி2-9)

## சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், செப். 8

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக்கூடலால் நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

இந்தச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நல்லூர் பூங்காவன உற்சவதினமான எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## குடிமனைக்குள் புகுந்த முதலை; திணைக்களத்திடம் ஒப்படைப்பு

கொடிகாமம், செப். 8

மீசாலை- புத்தூர் சந்தியில் சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்களத்துக்குப் பின்னால் அமைந்துள்ள தூர்வார் குளத்துக்குள் இருந்த முதலை கடந்த செவ்வாய்க்கிழமை குடிமனைக்குள் புகுந்ததால் அந்தப் பகுதி மக்கள் அச்சமடைந்து கிராம அலுவலருக்கு அறிவித்தனர்.

அவ்விடத்துக்கு விரைந்த கிராம அலுவலர், கிராம மக்கள் சேர்ந்து முதலையைப் பிடித்து தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் இடர் பிரிவினூடாக வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர். (ஓ-ரி2-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், செப்.8
கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியிடப்பட்டன. கிடைக்கப்பெற்ற பாடசாலைகளின் பரீட்சை முடிவுகள் வருமாறு:-

## யா/வட்டுக்கோட்டை இந்து கல்லூரி

**கணிதப் பிரிவு**

கே.கீர்த்தனன் - 3ஏ, கே.கஜாணன்- ஏ2பி, கே. உஷாந்தன் -ஏபிசி, என்.குகநாதன்- பி 2சி, எஸ். திவ்யா - 3சி, பி.சதுர்சன் - பிசிஎஸ்

**உயிரியல் பிரிவு**

எஸ்.சுகிர்தன் -2பிசி, எம்.கிருஷன்- பி2சி

**இயந்திரவியல் தொழில்நுட்ப பிரிவு**

வி.இமஜன்- ஏ2பி, எம்.யதுசன்- ஏ2பி, ஏ.தர்சினி -2ஏசி, ஏ.தர்மினி-ஏபிசி, கே.இனியவன்- 3சி, கே.தியானிகா- பி2சி, ஜே.டெஜிவன்- பி சிஎஸ், எஸ். கஸ்தூரி- 2சிஎஸ், எஸ்.கௌசலா- பிசிஎஸ், எஸ். கிருஷன்- பிசிஎஸ், எஸ்.ராஜகரன்- 3சி

**உயிரியல் தொழில்நுட்ப பிரிவு**

ரி.இசைச்செல்வி- 3பி, எஸ்.ஜினித்தா- 2பிசி, எம். டோமியா- 2பிசி, ஜி.கோவர்தனி- பி2சி, பி.ரசீந்தினி- பி2சி, ஜே.ஜெசிகா- பிசிஎஸ், பி.கேசவன்- 3சி

**வர்த்தகப் பிரிவு**

கே.விஷ்ணுஜன்- 3ஏ, எஸ்.லக்சனா- 2பிசி, ஜி.குகப்பிரியா- 2பிசி, வி.கௌசலா- ஏபிசி, பி.ஜீவனா- பி2சி, கே.வைஷ்ணவி- 2பிசி, எம். பார்நிலா- 3சி, வி.கஜனி- 3சி

**கலைப்பிரிவு**

எஸ்.டிலக்சனா- 2ஏபி, ஜே.யதுஷாயினி- ஏபிசி, எஸ்.சுசாந்தன்- ஏ2பி, ரி.அபிராமி- ஏ2பி, கே.சசிகா -ஏ2பி, வி.நிலக்சனா- 3பி, எஸ்.டுசாளினி- 3பி, கே.கம்ஷிகா- ஏபிசி. (ய-27)

## யா/அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி

**கலைப்பிரிவு**

இ.வானதி -3ஏ, இ.இஷானுகா -ஏபிசி, உ.மோகனப் பிரியா -ஏ2சி, ச.குகராணி -ஏ2சி. (ய-27)

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

**இயந்திரவியல் தொழில்நுட்பம்**

ரா.கிருபாகரன் 2ஏபி, அ.கனிஸ்ரன் 2ஏபி, சி.தமிழழகன் பி2சி

**வர்த்தகப் பிரிவு**

கொ.சஞ்சய் 3ஏ, வி.அனோஜன் 3ஏ, சி.முகமட் சஹ்ரான் 2ஏபி, சி.நிரூஜன் 2ஏபி, ச.முகமட் ஆஷிக் ஏ2பி, யூ.நிகேஷ் பெல்சியன் ஏபிசி, ஞா.கனிஸ்ரன் 3பி

**கணிதப்பிரிவு**

ந.கபீசன் ஏ2பி

**விஞ்ஞான பிரிவு**

ப.கிரிசரன் 3பி, வி.டிலக்சன் பி2சி

**கலைப்பிரிவு**

கே.அபின்சன் 2பிசி. (ய-27)

## யா/வேம்படி மகளிர் கல்லூரி

யாழ்ப்பாணம், செப். 7
கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி யாழ்ப்பாணம் வேம்டி மகளிர் கல்லூரி மிகவும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளது.
அந்தவகையில் 24 மாணவிகள் 3ஏ சித்திகளையும், 24 மாணவிகள் 2ஏபி சித்திகளையும், 14 மாணவிகள் 2ஏசி சித்திகளையும், ஒரு மாணவி 2ஏஎஸ் சித்தியையும், 15 மாணவிகள் ஏ2பி சித்திகளையும், 24 மாணவிகள் ஏபிசி சித்திகளையும் பெற்றுள்ளனர். (ய-27)

## யா/சன்டிலிப்பாய் இந்து கல்லூரி

**வர்த்தகப் பிரிவு**

க.தாரணி - 3ஏ, ஆ.தேனுசா - 2ஏபி, ஜெ. ஜெனார்த்தனி - 2பிசி.

**கலைப் பிரிவு**

அபிராமி - 3ஏ, கு.கவிதரன் - 2ஏபி, சு.சுஜீவன் - 2ஏபி, வி.திசைனி - 2ஏபி, கனெக்ஸ் - ஏ2பி, பு.நிலக்சன் - ஏ2பி, பு.டிவினிதா - ஏ2பி, வி.லிலாணி - ஏபிசி, நிறைஞ்சலா - ஏபிசி, டி.நிறோஜன் - 3பி. (ய-63)



கடந்த 4ஆம் திகதி வெளியாகிய க.பொ.த. உயர்தரப் பெறுபேற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணம் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த, யாழ். இந்துக் கல்லூரி மாணவன் ஸ்ரீபண்டாகரன் சினேகன் கணிதப்பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட நிலையில் முதலிடத்தைப் பெற்று பாடசாலைக்கும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளார். (ய-27)

## க.பொ.த. உ/த கணித, விஞ்ஞானப் பிரிவில்

# வவு. தமிழ் மத்திய வித்தியாலய மாணவர்கள் சாதனை



விமல்ராஜ் விதுவர்சன்

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற இரு மாணவர்கள் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேற்றில் கணித, விஞ்ஞானப் பிரிவில் முதலாம் மற்றும் 15 ஆம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.
இதன்படி, வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயின்ற வவுனியா - உக்குளாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த விமல்ராஜ் விதுவர்சன் விஞ்ஞானப் பிரிவில் 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும், அரசரட்ணம் திசோராஜ் கணிதப் பிரிவில் 2ஏ,பி சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 15 ஆவது இடத்தையும் பெற்று உக்குளாங்குளம் மண்ணுக்கும், பாடசாலைக்கும் பெருமை சேர்ந்துள்ளனர். (ய-18)



அரசரட்ணம் திசோராஜ்



யாழ்ப்பாணம் - வடமராட்சி, புலோலி வட மேற்கு முருகன்கோவிலடி அறிவகம் சனசமூக நிலையத்தின் 68ஆவது ஆண்டை முன்னிட்டு குருதிக் கொடை வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. (ய-27)

## நீச்சல் பயிற்சி முகாம்



கிளிநொச்சி நீர் விளையாட்டுச் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் அண்மையில் நடைபெற்ற இலவச நீச்சல் பயிற்சி முகாமில் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சர்வதேச நீச்சல் பயிற்றுநர் தம்பேர் பஞ்சரட்ணம் கலந்துகொண்டு நீச்சல் பயிற்சிகளை வழங்கினார். (ய-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலின் ஆட்சியிலும் மக்களுக்குத் துன்பமாம்

தேர்தல் கண்ணீர் வடிக்கும் பெரமுன

கொழும்பு, செப். 8

**பொதுஜன பெரமுன பலவீனமடையக்கூடாது என்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினோம். ஆயினும் பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்களால் மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள், அதை எம்மால் ஏற்கமுடியாது.**

- இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன காரியாலயத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

ராஜபக்சக்கள் மீது போலியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு போராட்டம் மேற்கொள்ளப்பட்ட பின்னணியில் ஆட்சிமாற்றம் ஏற்படுத்தப்பட்டது. வரிச்சலுகை வழங்கியது தவறு என்ற குற்றச்சாட்டு எம் ஆட்சியில் முன்வைக்கப்பட்டது.

தற்போதைய அரசின் வரி விதிப்புக்கு எதிராக ஒரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள். பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானங்களால் மக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். இதனை நாம் ஏற்கோம்.

திறந்த மற்றும் மூடிய பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தாது நடுநிலையான பொருளாதாரக் கொள்கைகளே நாட்டுக்கு வேண்டும். எமது கொள்கைகளை ஏற்பதா? அல்லது தற்போதைய நிலையை முன்னெடுத்துச் செல்வதா? என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்கட்டும் - என்றார். (ச-இ)



## திறன் வகுப்பறைத் திறப்பு

புதுக்குடியிருப்பு - தேராவில் தமிழ் வித்தியாலய திறன் வகுப்பறைத் திறப்பு விழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இன்றைய நவீன முறைக் கல்வி மற்றும் இணைய வழிக் கல்வி முறைகளில் மாணவர்கள் கற்று பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்தத் திறன் வகுப்பறை திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் கலந்து சிறப்பித்தார். மேலும் நிகழ்வில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஒ-ரி-219)

## நல்லூர் ஆலய வளாகத்தில் அனுமதி மறுக்கப்பட்ட பகுதியில் அடாத்தாக நிறுத்தப்பட்ட வாகனம்



யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம், நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் பொலிஸ் உயர் அதிகாரியின் சகோதரர் எனக் கூறிக்கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்த நபர் ஒருவர் தடுப்பு வேலிகளையும் தாண்டி ஆலய வளாகத்தினுள் தனது வாகனத்தை அடாத்தாக நிறுத்தியதால் ஆலயச்சூழலில் பரபரப்பு ஏற்பட்டது.

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயவருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ள நிலையில் ஆலய சுற்று வீதியில் வாகனங்கள் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள தோடு சிவப்பு, வெள்ளை வேலிகளுக்குள் எந்தவித வாகனங்களும் அனுமதிக்காதவாறு பாதுகாப்புத் தடுப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் நேற்றுமுன்தினம் மதியம் பொலிஸ் உயர் அதிகாரியின் சகோதரர் எனக் கூறிக்கொண்ட தென்னிலங்கையைச் சேர்ந்த நபர் சிவப்பு, வெள்ளை கொடிகள் கட்டப்பட்ட தடுப்பு வேலிகளையும் தாண்டி ஆலய முன்றிலில் பக்தர்கள் அங்கப்பிரதட்சணம் செய்யும் மணல்மேல் தனது காரை நிறுத்தியுள்ளார்.

ஆலயச் சூழலில் கடமையில் இருந்த யாழ்ப்பாணம் மாநகரசபைப் பணியாளர்கள் குறித்த காரை அகற்ற முற்பட்ட போதும் அங்கு கடமையில் இருந்த பொலிஸார் தமது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து மாநகரசபை பணியாளர்களையும் மீறி குறித்த காரை நிறுத்த அனுமதித்துள்ளனர். இதனை அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ்ப்பாண மாநகரசபை முன்னாள் உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன், பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதையடுத்து அந்த நபர் தனது காரை அப்புறப்படுத்தினார். (ம-9)

## புதிய நிர்வாகத் தெரிவுகள் மேற்கொள்ளுங்கள்

பிரதேச செயலகங்களிடம் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டத்தின் பல கிராமங்களின் பொது அமைப்புகளின் புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெறாமையால் பிரதேச செயலர்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் ஆகியவற்றுக்கு இரு ஆண்டுகள் கடந்த நிலையிலும் ஐந்தாண்டுகள் ஆகிய நிலையிலும் புதிய நிர்வாகத் தெரிவுகள் இடம்பெறவில்லை. இதன் காரணமாக கிராமத்துக்கு வருகின்ற உதவித் திட்டங்களை மக்களுக்கு விரைவாகக் கிடைப்பதில் தாமதங்கள் உருவாகி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலமாகப் பொது அமைப்புகள் தெரிவு செய்யப்படாததன் காரணமாக பொது அமைப்புகள் மந்தகதியிலும் இயங்கு திறனற்ற நிலையிலும் காணப்படுவதாகத் தெரிவிக்கும் பொதுமக்கள், பிரதேச செயலகங்கள் பொது அமைப்புகளைப் புதிதாகத் தெரிவு செய்து கிராம அபிவிருத்தியில் கவனம் செலுத்தும்படியும் கோரிக்கை விடுத்துள்ளனர். பொது அமைப்புகள் ஒழுங்காக இயங்காததன் காரணமாக நடைபெறவேண்டிய முக்கியமான கூட்டங்களும் நடைபெறு வதில்லை. கிராமங்களில் நடைபெறுகின்ற சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் பொது அமைப்புகளின் பங்கு பெருமளவில் காணப்பட வேண்டிய நிலையில் தற்போது பொது அமைப்புகளின் மந்தகதியான செயற்பாடு காரணமாக கிராமங்களில் சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதில் நெருக்கடி நிலை காணப்படுகின்றன. (ஒ-ரி-213)



## மருந்துப் பொருள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம் - கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும் குமரன் விளையாட்டுக்கழகத்தினதும் உயர்த்தும் கரங்கள் செயற்றிட்டத்தினூடாக லண்டன் குமரன் விளையாட்டுக்கழகத்தின் பங்களிப்பினூடாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கடந்த 4ஆம் திகதி திங்கட்கிழமை அத்தியாவசிய மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டன.

மருத்துவமனையில் இடம்பெற்ற நிகழ்வில் ஒரு இலட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருள்கள் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் சார்பில் மருத்துவ அத்தியட்சகரிடம் கையளிக்கப்பட்டன. (ஒ-66)

## பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு

தென்மராட்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை கிராமங்கள் தோறும் நீர்நிலைகளைத் துப்புரவு செய்யும் பணியில் ஜே/320 இராமாவில் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வெட்டுக்குளம் சிரமதானம் செய்யப்பட்டது. கிராம மட்ட உத்தியோகத்தர்கள் தலைமையில் மக்களால் பிளாஸ்ரிக் பொருள்களை அகற்றி, பற்றைகள் வெட்டி போக்குவரத்துப் பாதைகள் துப்புரவு செய்யப்பட்டது. (ஒ-ரி2-159)






## தடுப்பு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், செப். 8

"தற்கொலைத் தடுப்பு" பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக கடந்த வெள்ளிக்கிழமை நடைபவனியொன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

நல்லூர் றோட்றிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் பெனின்சுலா றோட்றிக் கழகமும் இணைந்து இந்த நடைபவனியை முன்னெடுத்தனர்.

தற்கொலைத் தடுப்புத் திட்டத்தை நோக்காகக் கொண்டு கொழும்பிலிருந்து புறப்பட்ட 40 பேர் அடங்கிய குழுவொன்று சைக்கிளில் யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது. இதன்போது உயிரின் மதிப்பை எடுத்தியம்பும் வகையிலும் தற்கொலையைத் தடுக்கும் வகையிலும் 1333 எனும் தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது. (ய-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாதாவின் சொரூபத்திலிருந்து குருதிக் கண்ணீர்!



யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, வதிரிப் பகுதியில் மாதாவின் சொரூபத்திலிருந்து குருதிக்கண்ணீர் வடிந்தோடுகின்றது என்று தெரிவிக்கப்படும் நிலையில், பெருமளவான மக்கள் அந்தச் சொரூபத்தைப் பார்வையிட்டு வருகின்றனர்.

கடந்த 26ஆம் திகதி பிரான்ஸில் இருந்து இந்தச் சிலை கொண்டு வரப்பட்டுள்ளது என்று சொரூபம் வைக்கப்பட்டுள்ள வீட்டின் உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் யாழ்ப்பாணம் மறைமாவட்டத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-27)

# ஆனைப்பூர் அடைக்கலநாயகிக்கு இன்று திருவிழாத் திருப்பலி!

யாழ்ப்பாணம், செப். 8

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தின் திருவிழாத் திருப்பலி இன்று காலை ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து ஆனைக்கோட்டை கிராமத்தைச் சுற்றி தேர்பவனியும் இடம்பெறவுள்ளது. (ம)


## உடனடி வேலைவாய்ப்பு

புதிய கம்பனிக்கு உத்தியோகத்தர்கள் தேவை.
ஆண்/பெண் கல்வித்தகைமைக்கு ஏற்றவாறு பதவிகள் வழங்கப்படும்.
தொடர்பு: 076 1124 145

## A/L Chemistry Tamil / English

ஆசிரியரால் ( BSc, MSc (Chemistry)
தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.
076 410 5838


# ஹெரோய்ன், வாளுடன் நடமாடியவர் கைதானார்

நெல்லியடிப்பகுதியில் ஹெரோய்ன் மற்றும் வாள்களுடன் நடமாடியவர் சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 3 கிராம் 80 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது. (ம-26)

## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்






எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர்

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா**

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக மீண்டும் இரண்டாவது தடைவையாகவும் நியமனம் பெற்றமையையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, பேராசிரியர் அவர்களின் பணி மேன்மேலும் சிறந்தோங்க அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்**
**யா/ உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 05 . 1944



மறைவு 20 . 08 . 2022

அமரர்

**கந்தையா விநாயகமூர்த்தி**

ஆண்டொன்று ஆனதுவோ?
ஆறவில்லை எம் துயரம்?
யாண்டும் உங்கள் இனிய முகம்
எம் நினைவில் நிற்கின்றது.
மீண்டும் எங்கள் இல்லம் வந்து
மகிழ்ந்திருக்கக் கூடாதோ?
ஆண்டவனே! எம் தந்தை
இறை நிழலில் சாந்தி பெறுக.

முருகேச பண்டிதர் வீதி,
சுன்னாகம் தெற்கு.

குடும்பத்தினர்.

(CS 26152) A-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 06 - 1946



மறைவு 20 - 08 - 2022

**அமரர் கனகசபை பத்மநாதன்**

**திதி : 08.09.2023**

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

CS 26159 (A-1)

பிடாரி கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 18 - 10 - 1941



ஆண்டவன் அடியில் 01 - 09 - 2021

அமரர்

**கந்தையா பழனிவேற்பிள்ளை**

**(ஓய்வுநிலை அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர்)**

**திதி - அபரபக்க நவமி**

அவனிவிட்டு நீங்கள் சென்று
ஆண்டு இரண்டு ஆனதப்பா!
அனுதினமும் உனை எண்ணி
ஆறாத் துயரடைந்தோம். அப்பாவே!
பாசத்தை பொழிந்தீர் அப்பா - எமை
பக்குவமாய் வளர்த்தெடுத்து
பார்புகழ வாழ வைத்த தெய்வமே!
எம் உயிர் உள்ளவரை நின்நினைவே
எம் நிறை வாழ்வு அப்பா.
உங்கள் ஆத்மா இறையடியில்
நித்திய சுகம் பெற
நித்தம் வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

இல.36/4, சம்பியன்லேன்,
கொக்குவில்.

நின் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளில்
# பதுக்கிய பணத்தைக் கைப்பற்ற ஐக்கிய நாடுகள் சபை உதவி!



### நீதி அமைச்சர் விஜயதாஸ தகவல்

கொழும்பு, செப்.8

**மோசடியான முறையில் சொத்துகளைச் சம்பாதித்து வெளிநாடுகளில் வைப்பிலிட்ட நபர்களிடம் இருந்து பணத்தை மீட்பதற்குத் தேவையான உதவிகளை வழங்க ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் இணங்கியுள்ளது என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையின் போதைப் பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகத்தின் தெற்காசியப் பிராந்தியப் பிரதிநிதி மார்கோ டீக்சீராவுடன் நீதி அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் பின்னர் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மோசடியான முறையில் சொத்துகளைப் பெற்ற நபர்களால் வெளிநாடுகளில் வைப்பிலிடப்பட்டுள்ள பணத்தை மீட்பதற்கான பணிகள் அடுத்த சில நாள்களில் ஆரம்பிக்கப்படும். மோசடியாகச் சொத்துகளைச் சம்பாதித்து வெளிநாடுகளில் பணவைப்புச் செய்தவர்களிடம் இருந்து பணத்தை மீட்க உலக வங்கி சார்பில் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் செயற்பட்டு வருகிறது.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் புதிய ஊழல் தடுப்புச் சட்டம் நடைமுறைக்கு வரவுள்ள நிலையில், இலங்கையின் புதிய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு அவ்வாறான நபர்களைக் கையாள்வதற்கான திறன் இருக்கும்.

திருடப்பட்ட சொத்துகளை மீட்க உலக வங்கி மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் போதைப்பொருள் மற்றும் குற்றவியல் அலுவலகம் ஆகிய அமைப்புகள் இணைந்து பயன்படுத்தும் திருடப்பட்ட சொத்து மீட்பு உதவி (ஸ்டார்) அமைப்பு நடவடிக்கை எடுக்கும்- என்றார்.

ஸ்டார் என்பது உலக வங்கி குழுவுக்கும் போதைப்பொருள் மற்றும் குற்றத்துக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகத்துக்கும் இடையிலான கூட்டு நிறுவனமாகும். இது ஊழல் நிதிகளுக்கான பாதுகாப்பான புகலிடங்களை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச முயற்சிகளை ஆதரிக்கிறது.

ஊழலின் மூலம் கிடைக்கும் பணத்தைச் சுத்தப்படுத்துவதைத் தடுக்கவும், திருடப்பட்ட சொத்துகளை முறையாகவும் சரியான நேரத்தில் திரும்பப் பெறவும், வளரும் நாடுகள் மற்றும் நிதி மையங்களுடன் ஸ்டார் இணைந்து செயற்படுகிறது. (எ-இ)



# கின்னஸ் சாதனைக்கு சிப்பாய் நடைபயணம்

யாழ்ப்பாணம், செப். 8

உலக கின்னஸ் சாதனை படைக்கும் முயற்சியாக சிப்பாய் ஒருவர் நடைபயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

சற்கோட்டை - பருத்தித்துறை முனையிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை இந்த நடைபயணத்தை அவர் ஆரம்பித்துள்ளார்.

14 நாள்களில் தினமும் 60 கிலோமீற்றர் தூரத்தை ஓய்வின்றி நடந்து காலி தெய்வேந்திரமுனையை எதிர்வரும் 18ஆம் திகதி அடைந்து சாதனை செய்ய திட்டமிட்டுள்ளார்.

பலாலி படைமுகாமில் கடமையாற்றும் ஹொரவப்பொத்தானை பிரதேசத்தைச் சேர்ந்த சிப்பாயே இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளார். (ச-100)

# பெரமுனவின் தயவிலே எம்.பி.யானார் மைத்திரி

### சந்திரசேன எம்.பி. சீண்டல்

கொழும்பு, செப். 8

பொதுஜன பெரமுன கட்சியின் புண்ணியத்தால்தான் மைத்திரிபால சிறிசேன இன்று எம்.பி.யாக இருக்கின்றார். இதனை மறந்தே அவர் எமது கட்சிக்கு எதிராகப் பரப்புரை செய்துவருகின்றார் என்று பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மொட்டுக் கட்சியின் புண்ணியத்தால்தான் சுதந்திரக்கட்சிக்கு 14 எம்.பிக்கள் கிடைத்தனர். தனித்துப் போட்டியிட்டிருந்தால் இரு ஆசனங்கள்கூட கிடைத்திருக்காது. இதனை மறந்துவிட்டே மைத்திரி உளறுகின்றார்.

அடுத்து ஏதோவொரு கூட்டணியில் தொங்குவதற்காகவே அவர் அவ்வாறு செயற்படுகின்றார். மொட்டுக் கட்சியின்மூலம் வந்தவர்கள் தான் இன்று மொட்டுக் கட்சியைத் தாக்குகின்றனர்" - என்றார். (ம-44)

# இராணுவத்தால் பிடிக்கப்பட்ட மகன் உயிருடன் சிறைக்குள்

### மீட்டுத் தரவேண்டும் என்று தந்தை கண்ணீர்க்கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 8

இலங்கை இராணுவத்தால் பிடித்துச் செல்லப்பட்ட எனது மகன் சிறைச்சாலைக்குள் இருப்பதற்கான ஆதாரங்கள் ஊடகங்கள் மூலம் இரண்டு தடவைகள் வெளிவந்த போதும் பதினேழு ஆண்டுகள் கடந்தும் இதுவரையும் எனது மகனைப் பார்க்க முடியவில்லை. எனவே நான் இறப்பதற்கு முன்னர் என் மகனைப் பார்க்க வேண்டும் என்று அரசியல் கைதியொருவரின் தந்தை கண்ணீர்மல்கத் தெரிவித்துள்ளார்.

சுந்தரலிங்கம் அருணகிரிநாதர் என்ற அந்தநபர், யாழ்ப்பாணம் - கல்வியங்காட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2006 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 25 ஆம் திகதி நல்லூர் அரசடி இராணுவச் சோதனைச் சாவடியில் இராணுவத்தால் எனது மகன் அருணகிரிநாதன் சுதன் பிடித்துச் செல்லப்பட்டார். அதன் பின்னர் சில காலம் எனது மகனை இராணுத்தினர் வைத்திருந்ததை எமது உறவினர்கள், நண்பர்கள் பலரும் கண்டு எனக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். அப்போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துப் பேசியபோது, 48 பேர் கொண்ட கைதிப்பட்டியலில் எனது மகனும் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. எனினும், மகனின் விடுதலையைக் கோரியபோதும் அது சாத்தியப்படவில்லை.

சிறைச்சாலையில் இருந்து பரீட்சை எழுதும் கைதிகள் தொடர்பாக, மேலுமொரு இணைய ஊடகமொன்றில் தற்போது வெளியான புகைப்படத்தில் எனது மகன் இருப்பதும் தெரியவந்துள்ளது. அண்மையில் காணாமலாக்கப்பட்டவர்களின் அலுவலகம் குறிப்பிட்ட சிலரைக்கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. அவர்கள் என் மகனையும் கண்டுபிடித்து என்னிடம் ஒப்படைக்கவேண்டும் - என்றார். (ம-27)

# யோகா கற்கைநெறி

யாழ்ப்பாணம், செப். 8

வடமாகாணக் கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உளமேம்பாட்டுக்கான இலவச யோகக்கலை அடிப்படைக் கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு நல்லூர் மங்கையர்க் கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மூன்று மாத காலங்கள் கொண்ட இந்தக் கற்கைநெறி சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்களில் நடைபெறும். ஆர்வமுள்ள இருபாலாரும் வயது வேறுபாடின்றி கற்கைநெறியில் கலந்து கொள்ள முடியும்.

கற்கைநெறியின் இறுதியில் கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளன.

இந்தக் கற்கைநெறியைத் தொடர விரும்புவோர் வடமாகாணக் கல்வி அமைச்சில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பலாம் என்று கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் தெரிவித்துள்ளார். (எ-ரி2)

## கடந்த ஆண்டில் மட்டும்



# 21, 953 வீதி விபத்துகள் 2,515 உயிரிழப்புகள்

கொழும்பு, செப். 8

கடந்த ஆண்டு இடம்பெற்ற வீதி விபத்துகளில் 2 ஆயிரத்து 515 பேர் உயிரிழந்துள்ளனர் என்று மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டில் 21ஆயிரத்து 953 விபத்துகள் பதிவாகியுள்ளன. அவற்றில் 2 ஆயிரத்து 395 விபத்துகள் மோசமான விபத்துகளாகக் காணப்படுகின்றன.

அதேவேளை கடந்த ஆண்டு இடம்பெற்ற விபத்துகளுக்கு தண்டப்பணமாக 2.5 பில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளது.

இதில் 1.3 பில்லியன் உடனடித் தண்டப்பணமாகவும் 1.2 பில்லியன் நீதிமன்றம் மூலமாகவும் அறவிடப்பட்டுள்ளது.

இவற்றுள் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டில் 622 மில்லியன் ரூபா 25 ஆயிரத்து 38 பேரிடம் அறவிடப்பட்டுள்ளது.

அத்துடன் தலைக்கவசமின்றிப் பயணித்த 203,586 பேரிடம் 210 மில்லியன் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது என்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (த-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலதிக தொழில் ஆணையாளர் நாயகமும்
சட்டத்தரணியுமான

## திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன்

அவர்களின்

# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

Best Wishes



எழில் கொஞ்சும் இணுவையில் தம்பிராசா தம்பதியினர் பெற்ற மகராசி
இணுவை இந்துவுடன் இராமநாதன் கல்லூரியின்
அறிவில் வளர்ந்த மங்கை

யாழ். பல்கலையில் வியாபார நிர்வாக பட்டம் பெற்று! ஏழாலை மகா
வித்தியாலயத்தில் ஆசிரியர் பணிபுரிந்தாய் வாழி!

தொழிலாளர் நலன்காக்கும் சேவை நோக்கில்
தொழில் உத்தியோகத்தர் பதவி
பெற்று செய்யும் தொழிலே தெய்வம் என்னும் பாங்கில்
தொழிலாளர் நலம் காத்து உயர்வு பெற்றாய் வாழி!

Best Wishes

### பணி விபரம்

| | |
|---|---|
| 1988 ஐப்பசி | - 1989 ஐப்பசி வரை ஆசிரியர் சேவை |
| 1989 கார்த்திகை | - 2006 கார்த்திகை வரை தொழில் உத்தியோகத்தர் |
| 2006 கார்த்திகை | - 2015 சித்திரை வரை உதவித் தொழில் ஆணையாளர் |
| 2015 சித்திரை | - 2018 சித்திரை வரை பிரதித் தொழில் ஆணையாளர் |
| 2018 சித்திரை | - 2022 மாசி வரை தொழில் ஆணையாளர் |
| 2022 மாசி | - 2023.09.07 வரை மேலதிக தொழில் ஆணையாளர் நாயகம் |

அன்போடு பண்பும் அறிவோடு நல்லடக்கமும்
நெஞ்சோடு நேர்மையும் சொல்லோடு செயலுமாய்
கடமையே கண்ணெனக் கருத்துடன் பணிசெய்தீர்

அலுவலகம் ஆலயமென அழகுறப்பேணி
தொழிலாளர் நலனே சிரமேற்கொண்டு
கடமைதனை செய்தே முடித்திடும்
எம் அன்புத் தலைமையே
அழியாப் புகழுடன் வாழி வாழி

Best Wishes

இரவு பகலென இடையறா பணி செய்தீர்
இன்சொல் பேசி இன்முகம் காட்டினீர்
உம் பணியில் உயர்ந்திட்டது தொழில் திணைக்களம்
ஆயினும் இந்நன்நாளில் ஓய்வு பெற்றுச் செல்கின்றீர்
என்றும் புகழுடன்
அன்பு அறம் பொருள் இன்பம் பெற்று
ஏற்றமுற பல்லாண்டு பல்லாண்டு வாழியவே

**உள்ளத்தால் வாழ்த்தும்**

**திரு.திருமதி தம்பிராசா பாரிசாதபவளம்**
**குடும்பத்தினர்.**

(CS/52015)AH-1

# மணிவிழா வாழ்த்து

**இன்று (08.09.2023) வெள்ளிக்கிழமை 60 ஆவது அகவை காணும்**
**இணுவில் மேற்கு, பாலாவோடையைச் சேர்ந்த**

## திருமதி நீலலோஜினி ஜெகதீஸ்வரன்

(BBA, LLB, MAE (Reading)
(மேலதிக தொழில் ஆணையாளர்
நாயகம் (Dept)

Congratulations



தொழில் உத்தியோகத்தராக (பிரதேசம்)
உதவித் தொழில் ஆணையாளராக (மாவட்டம்)
பிரதித் தொழில் ஆணையாளராக (மாகாணம்)
தொழில் ஆணையாளராக
(தலைமைச் செயலகம்)
மேலதிக தொழில் ஆணையாளர் நாயகமாக
(நாடளாவியது)

33 ஆண்டுகளில் நேர்மை. ஒழுங்கு.
கண்ணியத்துடன் அரச கடமையில் உயர்ந்து
உச்சம் தொட்ட பெருமைக்குரிய இவரின் பணி நிறைவுறுதலைப் பாராட்டுவதுடன்
வருங்காலமும் சிறக்க இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

**உறவுகள், நண்பர்கள்.**

(CS/26300)AH-1

# உலகை ஆளும் ஊடகத்துறைக்குள் நீங்களும் பிரவேசிக்க விருப்பமா ?




பயிற்சிகள் யாவும் இலவசமாகவே நடத்தப்படும்

## உதயன் ஊடகப் பயிற்சி - 2023

- உங்கள் ஒவ்வொருவரையும் பட்டைதீட்டி ஊடகத்துறையில் மிளிரச்செய்வதற்கு "உதயன்" தயாராகின்றான்.
- உதயனின் இந்தப் பயணத்துடன் கைகோர்க்க உங்களுக்கு விருப்பமா?
- அச்சு, இலத்திரனியல் ஊடகத்துறையின் அடிப்படைகள் மூத்த ஊடகர்கள், பல்கலை விரிவுரையாளர்களால் போதிக்கப்படும்.
- ஒரு மாத காலம் பயிற்சி மற்றும் ஊடகப்பணி தொடர்பான அனுபவங்களைப்பெற முடியும். அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும் மற்றும் பயிற்சி முடிவில் திறமையானவர்களுக்கு வேலைவாய்ப்பிற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.
- 18 - 30 வயதுக்கு இடைப்பட்ட இரு பாலரும் விண்ணப்பிக்க முடியும்.
- பயிற்சிகள் யாவும் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் தலைமை அலுவலகத்தில் வார நாட்களில் நடைபெறும்.

உங்கள் சுயவிவரக் கோவையை 10.09.2023 இற்கு முன்னர் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு அல்லது **digital@uthayan.com** மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
03 . 06 . 1975

மறைவு
07 . 09 . 2023



## அன்ரனி பங்கிராஸ் ஜெகப்சன் க்குளோடியஸ் (ஜெகன்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அன்ரனி பங்கிராஸ் ஜெகப்சன் க்குளோடியஸ் (ஜெகன்) நேற்று (07.09.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்ரனி பங்கிராஸ் மற்றும் கொட்பிறி சந்திராதேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மரியநாயகம் மற்றும் றெஜிஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும், சுபதினியின் அன்புக் கணவரும், சம்சிகா (மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற லரோஷிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், நித்தியானந்தியின் அன்புச் சகோதரனும், குணசீலனின் அன்பு மைத்துனரும், தருணி, ஜெகத், பியோனி ஆகியோரின் அருமை மாமாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.09.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து சில்லாலை கதிரைமாதா ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டு, புனித கதிரைமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

( CR 52011 )AH-1

தகவல்
குடும்பத்தினர்.

071 321 5481

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

முதியவரொருவர் கிணற்றில் இருந்து நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். எழுதுமட்டுவாழ் பகுதியைச் சேர்ந்த குஞ்சுராசா என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரவு படுக்கைக்குச் சென்ற அவரைக் காணவில்லை என்று தேடியபோதே அவர் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கொடிகாமம் பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-9)

## வீடு தேவை

கல்வியங்காடு, இருபாலை, கட்டைப்பிராய், கோப்பாய், நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் வீடு விலைக்குத் தேவை. விற்க விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். (தரகர் தேவையில்லை) (பரப்புக்குட்பட்ட வீட்டுடன் காணி தேவை)

077 657 7365

leads
Where Children Come First...

## VACANCY

We are a Christian based community development organisation that partners with people of all faiths. We operate island-wide, focusing on the most vulnerable citizens and communities through development, humanitarian work, and advocacy.

**Project Coordinator (Northern Province)**

A diploma in disaster management or Disaster risk reduction from a reputed institute is desirable.

2 - 3 years' experience in community development work.

Ability to plan, implement and monitor project activities independently.

Should be computer literate, in word and excel.

Ability to write reports preferably in English.

Capacity to work with the Ministry of Education and related local government institutions is an added advantage.

Good written and oral communication skills in English and Tamil.

Should be a Team player.

Applications for this position should include two non-related referees All applications will be treated with strict confidence and should be sent within 10 days of this advertisement, quoting "Project Coordinator" to LEADS no 7/2 Kumarasuwamy Road, Kanesapuram, Kilinochchi.

(CS/52016)AH-1

# YARL SMART (Pvt) Ltd

எமது வாடிக்கையாளர்களுக்கான அரிய வாய்ப்பு.
நீங்கள் உங்கள் அயலவர்கள். நண்பர்களுக்கு எமது நிறுவனத்தைப்பற்றி தெரியபடுத்தி அவர்களும் எமது Water Fillter பொருத்தினார்கள் என்றால் அன்பான வாடிக்கையாளரான உங்களுக்கு ! வருடத்திற்குரிய Sediment Fillter (6ps ) இலவசமாக தரப்படும்.

* One Year Warranty For All Electronic Parts.
* Life Time Free Service Warranty
* Free Water Testing.
* Freely Available Spare Parts
* 24 Hours Breakdoewn Service.




More Information call us
021 430 0044 /076 666 5267

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை மாத்திரையுடன் இளைஞரொருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம் நகரப்பகுதியில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினரால் அவர் கைதுசெய்யப்பட்டார். கைதான இளைஞனிடம் இருந்து 40 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டன. அவரிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-26)

# போதை வியாபாரம் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், செப். 8

யாழ்ப்பாணம்-கோப்பாய் பகுதியில், வீட்டில் வைத்து கஞ்சா மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்த இளைஞர் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த தகவல்களுக்கு அமைய இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது. சந்தேக நபரான இளைஞர் 25 வயதுடையவர் என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-26)

## 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் பொன்னையா பாலசிங்கம்

(Retired Superintendant of Audit)



தோற்றம் 19.09.1931 மறைவு 21.08.2003

அன்புக்கும் பண்புக்கும்
இலக்கணமாய் வாழ்ந்து
அவனியிலே - எமை
வாழ்வாங்கு வாழ வைத்த
தந்தையே!
இருபதாம் ஆண்டு நினைவு
நாளில் - உமை
நினைந்து வணங்குகின்றோம்
அப்பா!

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டி

166/3, சேர்.பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி.

(CS/31985)AH-1

## 10ஆவது நினைவுதினம்

அமரர் சண்முகம் தணிகாசலம்

(சமாதான நீதவான் - திருநெல்வேலி)



தோற்றம் 08.08.1933 மறைவு 29.08.2013

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச்
சொன்னமொழி
நான் மறந்து
போவேனோடி - கிளியே!
நல்லூரான் தஞ்சமடி

528, பலாலிவீதி, திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

(CS/26151)AH-1

## கிடுகு வழங்குநர்களுக்கான கூறுவிலை கோரல்

ஆனையிறவு உப்பளத்துக்கு சுமார் 30,000 கிடுகுகள் (07 அடி நீளம், 10 அங்குல அகலம்) வழங்குதவற்கான மூடப்பட்ட கூறுவிலை கோரப்படுகின்றது. கிடுகுகள் விநியோகிக்கக் கூடிய தகுதியுடையவர் 16.09.2023 ஆம் திகதிக்கு முன்னர் நேரம் 1.30 pm உரிய விண்ணப்பப் படிவத்தின் மூலமாக விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரர் கூறுவிலை திறக்கப்படும் நாளில் பங்கு பற்றலாம். விண்ணப்பப் படிவத்தையும், மேலதிக தகவல்களையும் 0213204556, 074 202 3334 என்ற தொலைபேசி ஊடாகவும் nationalepass@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

முகாமையாளர்,
ஆனையிறவு உப்பளம்.

(CR/40522)AH-1

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்
## விண்ணப்பம் கோரல் -வெளிவாரி

பதவி - விற்பனை உதவியாளர்

குறி இல 308/17

**01. சம்பள அளவுத்திட்டம் :-**

(கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2022 சுற்று நிருபத்திற்கமைய 308/17 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்.

16515-130X10-145X10-19265

198180-1560X10-1740X10-231180

இதர படிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

**02. வயதெல்லை :-** இல்லை

**03. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் :-**

அ) கூட்டுறவு ஊழியர் கனிஷ்ட தராதரப்பத்திரம் / 08 ஆந் தர கல்விச் சான்றிதழ்.

**விண்ணப்ப முடிவுத் திகதி: 25.09.2023**

**04. விண்ணப்பிக்கும் முறை :-**

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10.00 இனை செலுத்திப் பெற்று பூரணப் படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"விற்பனை உதவியாளர் குறி இல 308/17"** பதவிக்கான **விண்ணப்பம்** எனக்குறிப்பிட்டு **"தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) இல 127,கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு 25.09.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடம்
## விண்ணப்பம் கோரல் -வெளிவாரி

பதவி - காவலாளி

குறி இல 315/16

**01. சம்பள அளவுத்திட்டம் :-**

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் 02/2022 சுற்று நிருபத்திற்கமைய 315/16 ஆவது சம்பளக் குறியீட்டின் படி சம்பளத்திட்டம்.

16975-135X10-150X10-19825

203700-1620X10-1800X10-237900

இதர படிகள், விசேட படிகளும் வழங்கப்படும்.

**02. வயதெல்லை :-** இல்லை

**03. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) 05 ஆம் தர கல்விச் சான்றிதழுடன் சிறந்த தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முடிவுத் திகதி:-25.09.2023**

**04. விண்ணப்பிக்கும் முறை :-**

மேற்படி பதவிக்கான விண்ணப்பப் படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலத்தில் ரூபா 10.00 இனை செலுத்திப் பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"காவலாளி குறி இல 315/16"** பதவிக்கான **விண்ணப்பம்** எனக்குறிப்பிட்டு **"தலைவர், யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)" "இல 127, கே.கே. எஸ். வீதி யாழ்ப்பாணம்"** என்னும் முகவரிக்கு 25.09.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வே ண்டும்.

தலைவர்
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளுக்கான 30.06.2023ம் திகதியுடன் முழுவுறுத்தப்பட்டுள்ள வாக்களிக்கத்தகுதியுடைய வாக்காளர்களின் பெயர் விபரம் அடங்கிய வாக்காளர் பட்டியல் இயங்குகின்ற கிளைகளிலும் இயங்காத கிளைகளின் பட்டியல் சங்கத் தலைமைக் காரியாலயத்திலும் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. என்பதை அறியத்தருகின்றோம்.

| கிளை இலக்கம் | காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடம் |
|---|---|
| கிளை இலக்கம் 01 மண்டைதீவு | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 02 மண்டைதீவு | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 03 அல்லைப்பிட்டி | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 04 மண்கும்பான் | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 05 ஆமம்புலம் | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 06தேவிகோட்டம் | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 07 துறையூர் | கிளைநிலையம் |
| கிளை இலக்கம் 08 சந்திரா | கிளைநிலையம் |
| கிளை இலக்கம் 09 சிற்பனை | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 10 வங்களாவடி | கிளைநிலையம் |
| கிளை இலக்கம் 11 வேலணை மத்தி | கிளைநிலையம் |
| கிளை இலக்கம் 12 சோளாவத்தை | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 13 பள்ளம்புலம் | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 14 சரவணை | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 15 கேணிக்கரை | தலைமைக்காரியாலயம் |
| கிளை இலக்கம் 16 அம்பிகைநகர் | கிளைநிலையம் |

இப்பட்டியல் 07.09.2023 ம் திகதியில் இருந்து 20.09.2023 வரை மேற்குறிப்பிட்ட இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் மேற்படி வாக்காளர் பட்டியல் தொடர்பான திருத்தங்கள் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் சங்கச்செயலாளருக்கு எழுத்து மூலம் 22.09.2023 ம் திகதிக்கு முன்னர் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
வேலணை பல நோக்குக்கூட்டுறவுச்சங்கம் வேலணை
தொ.பே.இல 0212211522

(CS/40524)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அலைபேசிகளை...

அதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களான மாணவர்களிடம், பொலிஸார் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் அவர்கள் உயிர்கொல்லிப் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என்பதும், போதைப்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்குப் பணம் தேவை என்பதால் இவ்வாறான திருட்டுகளில் ஈடுபட்டமையும் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26)

### சிறார்களை...

டம் ஐஸ் போதைப்பொருளைத் திணித்து அடிமையாக்கும் பெண்களைக் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தெ.மேனன் தலைமையிலான குழுவினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டது.

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் கடமையாற்றும் பெண்ணொருவர் உள்ளடங்கலாக நான்கு பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். பெண் உள்ளிட்ட இந்தச் சந்தேகநபர்கள் ஐஸ் போதைக்கு அடிமையானவர்கள் என்பதுடன், சிறார்களையும், மாணவர்களையும், பதின்ம வயதினரையும் இலக்குவைத்து அவர்களிடம் ஐஸ் போதைப்பொருளைத் திணித்து அவர்களையும் போதைக்கு அடிமையாக்கியதுடன், தமது போதை வியாபாரத்தையும் அவர்களைக் கொண்டு கட்டமைத்து வைத்திருந்துள்ளனர். சந்தேகநபர்களிடம்மேலதிகவிசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வலைப்பின்னல் எத்தகையது? அந்தக் குழுவுடன் வேறு எவருக்கும் தொடர்புள்ளதா? என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர். (அ-ம-26)

### சுயபிரபலத்துக்காகவே...

காக அல்ல, தன்னை பிரபல்யப்படுத்திக் கொள்வதற்காகவே அந்தநிறுவனம் காணொலிகளை வெளியிட்டு வருகின்றது.- என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

எனினும், 'சனல் - 4' இல் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் தொடர்பில் ஆராயப்படும். முழுமையான விசாரணை நடத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

நீதி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் இடம்பெறுவதற்கு 29 மாதங்களுக்கு முன்னரே நீதி அமைச்சராக இருந்த போது பயங்கரவாதம் தொடர்பில் எச்சரிக்கை விடுத்திருந்தேன். ஆனால் அரசுக்குள்ளேயே எனக்கு எதிராக விமர்சனங்கள் எழுந்தன. உண்மையான பயங்கரவாதி நான்தான் என்று கூட விமர்சித்தனர். இன ஐக்கியத்தை சீர்குலைப்பதற்கு முற்படுவதாகவும் குறிப்பிட்டனர். இறுதியில் என்ன நடந்தது? உண்மை வென்றது.

எனது கூற்றுத் தொடர்பில் உரிய வகையில் ஆராய்ந்திருந்தால் தாக்குதலைத் தடுத்திருக்க முடியும். தகவலை வழங்கியவரையே சுட்டுக் கொல்லும் வகையில்தான் எனக்கு எதிரான நடவடிக்கை அமைந்திருந்தது. ஜனாதிபதி ஆணைக்குழுவும் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தது.

உயிர்த்தஞாயிறுத் தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் சூழ்ச்சி உள்ளது, பிரதான சூத்திரதாரி உயிருடன் உள்ளார் என்ற கருத்தை முன்னாள் சட்டமா அதிபர் தப்புல டி லிவேராதான் வெளியிட்டார்.

அதன்பின்னரே அந்தக்கருத்து சமூகமயப்படுத்தப்பட்டது. அவர் சட்டமா அதிபராக இருக்கும்போது எதுவும் கூறாமல், ஓய்வுபெறும் நாளில் இந்த அறிவிப்பை விடுத்தார். தனக்கு அதிகாரம் இருந்த காலத்தில் உண்மையைக் கண்டறிய அவர் முற்படவில்லை.

அவரிடமிருந்து தகவல்களை எடுப்பதற்காக பொலிஸார் வாக்குமூலம் பெறுவதற்கு முற்பட்டாலும் அதற்கு எதிராகவும் தடை உத்தரவு பெறப்படுகின்றது. 'சனல் - 4' அல்ல, எவர் தகவல் வழங்கினாலும் சர்வதேச ஒத்துழைப்பைப் பெற்றாவது விசாரணைகளை முன்னெடுக்கத் தயாராக இருக்கின்றோம்' - என்றார். (அ-ம-44)

### 'சனல்-4' க்கு எதிராக...

பிக்குகள் தலைமையில் கொழும்பில் நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் நல்லிணக்கத்துக்கான அமைப்பினர் எனக் கூறிக்கொள்ளும் தரப்பாலேயே கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகத்துக்கு முன்னால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

'இது பிரிட்டனுக்கு எதிரான போராட்டம் அல்ல, மாறாக உரிய விசாரணையின்றி பக்கச்சார்பான முறையில் - புலம்பெயர் தமிழர்களிடம் பணம் வாங்கிக்கொண்டு காணொலியை வெளியிட்டுள்ள 'சனல் 4' நிறுவனத்துக்கு எதிரான போராட்டமாகும். எமது நாட்டு புலனாய்வுப் பிரிவு இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உறுதியற்ற தன்மையை உருவாக்க வேண்டுமெனில் முதலில் புலனாய்வுப் பிரிவு பலவீனப்படுத்தப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையே இதன்மூலம் இடம்பெற்றுள்ளது' என்று போராட்டத்தில் ஈடுபட்ட பிக்கு ஒருவர் கூறினார். அத்துடன், போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் பிரிட்டன் தூதரகத்திடம் இது தொடர்பில் மனுவொன்றும் கையளிக்கப்பட்டுள்ளது. (அ-ம-44)

### 'சனல்-4' வீடியோ...

றச்சாட்டை முன்னாள் ஜனாதிபதியும் முன்னாள் பாதுகாப்புச் செயலருமான கோத்தாபய நிராகரித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

2005ஆம் ஆண்டிலிருந்து ராஜபக்சக்களின் பாரம்பரியத்தை கறைபடுத்தும் நோக்கில் இந்த வீடியோ வெளியிடப்பட்டுள்ளது.

ராஜபக்சக்களுக்கு எதிராக குறித்த ஊடகத்தில் ஒளிபரப்பப்பட்ட முந்தைய படங்களைப் போலவே இதுவும் பச்சைப் பொய்யே என்றுள்ளது. (அ-ம)

# மரண அறிவித்தல்



## திரு. கனகசபை பத்மநாதன்

**(முன்னாள் வர்த்தகர் இலுப்பையடிச் சந்தி)**

யாழ்ப்பாணம் புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ். அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கனகசபை பத்மநாதன் நேற்று (07.09.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசையா - விஜயலக்ஸ்மி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கௌரிஅம்பாள் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகாம்பிகை மற்றும் பத்மநிதி, சபாநாதன் சிறீநாதன், தயாநிதி, ராஜநாதன், சிவாநிதி, செல்வநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ் சென்ற சதாசிவம் மற்றும் அருணாசலம், காலஞ்சென்ற தனலட்சுமி மற்றும் சரோஜா, தேவராஜா, மல்லிகா, காங்கேயன், ஜெயந்தி, லிங்கேஸ்வரி (ஆரணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜிதா (கொழும்பு), மயூரா (லண்டன்), பிரதீப் (லண்டன்), ஜகனா (லண்டன்), தாரணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திருத்தணிஈசன் (கொழும்பு), அருட்செல்வன் (லண்டன்), அபிலாஜினி (லண்டன்), விஜயகுமார் (லண்டன்), சிவகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷனா, அபர்னி, அக்ஷயன், சைனுஜா, யஸ்னுஜா, ஆருஷன், நிஷ்ருஜன், தருணி, சஜீவ், நிவீஷர், நிட்ரீஷா, பிரவின், கனுஜா, சர்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2023) வெள்ளிக் கிழமை நண்பகல் 12.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு பிற்பகல் 2.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**30/18, அத்தியடி குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

(CS 26155) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பச்சை....

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இரண்டாம்கட்ட அகழ்வின் இரண்டாம் நாள் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே மேற்படி எச்சங்கள் அடையாளம் காணப்பட்டு மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில், அகழ்வுப் பணிகளின் முன்னிலைச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்ததாவது:-

இரண்டாவது நாளாகவும் இன்று (நேற்று) கொக்குதொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு நடைபெற்றது. இதன்போது மேலதிகமான மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவை தொடர்ந்தும் நாளை அகழ்ந்தெடுக்கப்படும். இன்று (நேற்று) வேறுசில முக்கியமான தடயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. முக்கியமாக துப்பாக்கிச் சன்னங்கள் என சந்தேகிக்கப்படும் உலோகத் துண்டுகள் மீட்கப்பட்டுள்ளன. கண்டெடுக்கப்பட்ட ஆதாரங்களைப் பகுத்தறிந்த தன் பிற்பாடே அதுதொடர்பில் அறியத்தரப்படும். அவதானிக்கப்பட்ட மனித எச்சங்கள், முழுவதுமாக இன்னும் வெளியில் எடுக்கப்படவில்லை. பகுதியளவிலேயே எடுக்கப்பட்டுள்ளன. உடைகளில் சில தடயங்கள் இருக்கின்றன. இதனை விரிவாக ஆராய்ந்த தன் பின்னர்தான் இது தொடர்பாகக் கூற முடியும் - என்றார்.

சம்பவ இடத்தில் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன், தொல்பொருள் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ, முல்லைத்தீவு மாவட்ட சட்ட மருத்துவ அதிகாரி க.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட மருத்துவ அதிகாரி செ.பிரணவன், சட்டத்தரணிகளான ரணித்தா ஞானராசா, வி.கே.நிறஞ்சன், கொக்குளாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கிராம சேவையாளர், தடயவியல் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் ஆகியோரும் உடனிருந்தனர். (ம-19.27)

### நீதிவழங்குமாறு...

றப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீதிகோரியும் சிறுமியின் உறவினர்களும் பொதுமக்களும் இணைந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் நுழைவாயில்களை மறித்து இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர். அத்துடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நீதிகோரும் வகையில் கையெழுத்துக்களும் சேர்க்கப்பட்டன. இந்தக் கையெழுத்துகள் அடங்கிய மனுவொன்று ஜனாதிபதி ரணிலுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

(அ-ம-20.26.100.27)

### சிறுமியின் கை...

மணிக்கட்டுடன் கை அகற்றப்பட்டதில், தாதியின் தவறுதான் காரணம் என்று சொல்லப்படும் நிலையில் அந்தத் தாதிக்குப் பயணத்தடை விதித்துள்ளது யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில், நேற்றைய தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. சிறுமியின் சார்பில் சட்டத்தரணிகளான சர்மினி பிரதீபன் மற்றும் லக்சன் செல்வராஜா ஆகியோர் முன்னிலையாகினர். சிறுமிக்கு மருத்துவத் தவறிழைத்த தாதி வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்லாதவாறு அவருக்குப் பயணத்தடை விதிக்க வேண்டும் என்று சிறுமியின் பெற்றோர் தம் சட்டத்தரணிகள் மூலமாக மன்றில் கோரிக்கை வைத்தனர். இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அவருக்குப் பயணத்தடை விதித்து உத்தரவிட்டது. (ம-26)

### கையை....

சேர்க்கப்பட்ட சிறுமிக்கு கை அகற்றப்பட்ட விவகாரத்தில், என்ன நடந்தது? என்பதை விசாரிக்கவும் நிபுணத்துவ ஆலோசனை வழங்குவதற்காகவும் நீதிவான் ஆனந்தராஜாவால் மூன்று மருத்துவர்கள் அடங்கிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு சிறுமிக்குக் கையை அகற்றியது ஏன்? இந்த விடயத்தில் மருத்துவத் தவறு நேர்ந்துள்ளதா? சிறுமிக்கு வழங்கப்பட்ட சிகிச்சை முறைகள் என்ன? என்பன தொடர்பில் விரிவான அறிக்கையை நீதிமன்றுக்கு வழங்கும். அவற்றின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை நீதிமன்றம் தீர்மானிக்கும். (அ-ம-26)

### புதைக்கப்பட்ட...

வவுனியா, செப். 8

வவுனியாவில் நீர்த்தொட்டியில் வீழ்ந்து இறந்த சிறுமியின் சடலம் மயானத்தில் புதைக்கப்பட்ட நிலையில் மாயமாகியுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மாதம் வவுனியா - நெளுக்குளம் பகுதியைச் சேர்ந்த சிறுமி ஒருவர் கிணற்றுக்கு அருகில் இருந்த நீர்த்தொட்டியில் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

சிறுமியின் சடலம் மரண விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்தச் சடலம் இராசேந்திரங்குளம் பகுதியில் அமைந்துள்ள மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச்சடங்குகள் இடம்பெற்று இரண்டு வாரங்கள் கடந்த நிலையில், அடக்கம் செய்யப்பட்ட இடத்திலிருந்து சடலம் மாயமாகியுள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. இது வவுனியாவில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸாரும் தடயவியல் பொலிஸாரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-ம-110,18)

### மூவருக்கு...

வரும் மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராக நீதிமன்றம் நேற்றுப் பிடியாணை பிறப்பித்தது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த ஜூலை மாதம் 23ஆம் திகதி அதிகாலை வீடு புகுந்து நடத்தப்பட்ட வன்முறையில், இளம் குடும்பப்பெண் ஒருவரும், அவருடைய கணவனும் உயிரிழந்திருந்தனர். இது தொடர்பில் ஆறு பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலும், புலன் விசாரணைகளின் அடிப்படையிலும் மேலும் மூவர் தேடப்படுகின்றனர். இந்த வழக்கு வவுனியா நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போதே மேற்படி மூவருக்கும் எதிராக நீதிமன்றம் நேற்றுப் பிடியாணையையும், பயணத்தடை உத்தரவையும் பிறப்பித்தது. அத்துடன், குறித்த வழக்கு அடையாள அணிவகுப்புக்காக எதிர்வரும் 21ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டது. (அ-ம-27,110,18)



## 'சரிகமப' போட்டியாளர் உதயனுக்கு வருகை

யாழ்ப்பாணம், செப். 8

உதயன் ஊடக அனுசரணையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் சரிகமப இசைநிகழ்ச்சியில் பங்குபற்றும் கலைஞர்கள் இலங்கையை நேற்று வந்தடைந்தனர். இவர்களில் தமிழகத்தின் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த நாக அர்ஜுனா, பலாலி விமான நிலையத்தின் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார். அவர் உதயன் பணிமனைக்கு நேற்று வருகை தந்தார்.

ஷீ தமிழ் தொலைக்காட்சியின் சரிகமப - 3 போட்டியின் இறுதிப் போட்டியாளர்கள் 6 பேரும் பங்கேற்கும் இசை நிகழ்ச்சி இன்று வவுனியாவில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து நாளை யாழ்ப்பாணத்திலும், நாளை மறுதினம் நெல்லியடியிலும் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. (ஓ,5)

## உதயனின் அனுசரணையில் சுழிபுரத்தில் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், செப். 8

உதயன் பத்திரிகையின் 38ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு அதன் சமூக சேவைகளை முன்னெடுக்கும் உதயவாழ்வு நிறுவனத்தின் அனுசரணையுடன் நாளை 9ஆம் திகதி சனிக்கிழமை காலை சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் மேற்கு கலைமகள் முன்பள்ளியில் காலை 8 மணி தொடக்கம் இலவச மருத்துவ முகாம் முன்னெடுக்கப்படவுள்ளது.

கலைமகள் சனசமூக நிலையத்தின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் இந்த முகாம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மருத்துவ முகாமில் 35 வயதுக்கு மேற்பட்ட நோயாளர் கிளினிக் செல்லாதவர்கள் கலந்து கொண்டு நீரிழிவு, உயர்குருதியமுக்கம், கொலஸ்ரோல், உடற்றிணிவுசுட்டி, கண்பரிசோதனை, பல் பரிசோதனை ஆகியவற்றைச் செய்து கொள்ளமுடியும். தேவையுடையவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன்படுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் அழைத்துள்ளனர்.

மருத்துவ முகாமில் கலந்து கொள்பவர்கள் காலை உணவை உட்கொள்ளாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ம)

### 33 கிராம்...

டுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்ட விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றோய் குணவர்த்தன, யாழ்ப்பாணம் மாவட்ட விசேட அதிரடிப்படையின் உதவிப் பொலிஸ் பரிசோதகர் கொடிதுவக்கு, யாழ்ப்பாணம் மாவட்ட விசேட அதிரடிப் படையின் பொறுப்பதிகாரி விஜயரத்ன, விசேட அதிரடிப்படையின் பொலிஸ் பரிசோதகர் திஸநாயக்க ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது.

கைதானவர் 46 வயதுடையவர். அவர் கொழும்பைச் சேர்ந்தவர். வாராவாரம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு போதைப்பொருளை எடுத்து வந்து விற்பனை செய்துவந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 200 கிராம் ஆபத்தான போதைப்பொருளுடன் கொழும்பிலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். இந்த இரு சந்தேகநபர்களிடமும் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இராணுவப் புலனாய்வுப்பிரிவினருக்கும், விசேட அதிரடிப்படையினருக்கும் கிடைத்த இரகசியத் தகவல்களின் அடிப்படையிலேயே இந்தக் கைது முன்னெடுக்கப்பட்டது. (அ-ம-27,26,100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மர்மப்பொருள் வெடித்து இருவர் படுகாயம்

முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் நேற்று மர்மப்பொருள் வெடித்ததில் இருவர் படுகாய மடைந்துள்ளனர்.

மாங்குளம் - நீதிபுரம் பகுதியைச் சேர்ந்த பார்த்தீபன் நிதர்சன் (வயது-6), மாரிமுத்து மணியம் (வயது-84) ஆகிய இருவருமே படுகாய மடைந்த நிலையில் மாங்குளம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விறகு எடுக்கச் சென்றவேளையில் அவர்கள் மர்மப்பொருளில் அகப்பட்டு படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச-19)


## வேலையாட்கள் தேவை

பிரபல நிறுவனம் ஒன்றுக்க வேலையாட்கள் தேவை.

- கணக்காளர் (Accountant)
- விற்பனைப் பிரதிநிதி (Sales Representative)
- உதவித் தொழில்நுட்பவியலாளர் (IT Assistant)

உங்கள் சுயவிபரக் கோவையை jaffna@lionagents.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(CS/52010)AH-1

## வேலைவாய்ப்பு

ஆங்கில தமிழ் மொழி மூலமான பாலர் பாடசாலையில் முன்பள்ளி மாணவர்கள் தொடக்கம் தரம் - 3 வரை கற்பிக்க கூடிய ஆங்கில ஆசிரியர்கள்

1). சரளமாக ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் (சம்பளம் 25000/= ரூபா)
2). ஆங்கிலம் பயிற்சி மற்றும் பழக விரும்புபவர்கள் (சம்பளம் 17000/= ரூபா)
3). சிங்களம் எழுத்துப் பயிற்சி வழங்க கூடியவர்கள். பேசக் கூடியவர்கள் (சம்பளம் 25000/= ரூபா)
4). இரு மொழிகளிலும் பயிற்சி கொள்ள விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் திகதி: 09.09.2023 சனிக்கிழமை காலை: 8.30 - பி.ப. 1.00 மணிவரை

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய தொ.இலக்கம்

077 377 0524

(CS 51990) A-1

## விவசாயிகளுக்கு

இந்தியாவிலிருந்து எம்மால் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட பச்சை மற்றும் சாம்பல் நிற "கோஸ் பைப்" 30m Roll (Green & Grey Hose Pipe) தரமானது, வளையக்கூடியது 1" - 4" வரை விசேட விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

2" Green - 18Kg (நீரை விநியோகிப்பதற்கு)
2" Grey - 32Kg (நீரை உறிஞ்சுவதற்கு)



ஆர்க் என்ரபிறைசஸ்
150, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4021
A9 வீதி, பரந்தன் சந்தி - 021 228 2020
எழுதுமட்டுவாள் A9 வீதி - 070 191 3571
HotLine: 071 535 7799 / 071 973 9917

## பணியாளர்கள் தேவை

யாழில் இயங்கும் தொலைபேசி நிலையத்திற்கு A/L படித்த 18 - 20 வயதுக்குட்பட்ட விற்பனையாளர். காசாளர் உடன் தேவை. சம்பளம் 35.000/=

தொடர்புகளுக்கு: 077 199 6117

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்தையில் இருந்து 300m தூரத்தில் வீடு வாடகைக்குண்டு.

071 055 7095

## NEC

Empowering Education to Inspire Students
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.

A/L DAY CLASS
வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : 09.09.2023 சனி காலை 08 மணி

2022 யாழ் நகரில் முன்னணி பெறுபேறுகளுடன் மாவட்ட நிலை 01 உட்பட 03,04,05,08,10,13,15,22,34,40,42,46
கிளிநொச்சி - 03 & மன்னார் - 04 உட்பட

ACCOUNTING - K.BALAKAJEN
ECONOMICS - S.JEYAKUMAR
BUSINESS - S.K.BALASABESH
ICT - V.NIROJAN

அனுமதியை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு : 0765350999

## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். K.K.S.றோட், சுன்னாகம்.
BARATHY-சித்தன்கேணி

எமது மூன்று நிறுவனத்திலும் கற்று அதிஉயர் பெறுபேறுகளை பெற்று உங்கள் பாடசாலைக்கும் எமது நிறுவனத்திற்கும் பெருமையீட்டி தந்த அனைத்து மாணவர்களையும் பாராட்டி இதுபோல் நீங்களும் சிறந்த பெறுபேறுகளை பெற்றிட ஆரம்பமாகிறது

A/L DAY CLASS
கலை - வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் - 11.09.2023
திங்கள் 8.00 AM

Note- நாளை சனிக்கிழமை தொடக்கம் உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

## கொழும்பு விலையில்

யாழ். நகரில் கோழிகள் விற்பனைக்கு உண்டு.

புறொய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ், ஊர்க் கோழி, சேவல், விறாத்துக் குஞ்சுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.முட்டைகள் அனைத்தும் ஒரே இடத்தில்.
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
(சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்)
1 Kg புறொயிலர் சுத்தம் செய்யப்பட்ட இறைச்சி விலை 1250/-
24 மணிநேர சேவை (இரவு பகல்)

தொடர்பு: நியு சிற்றி பாம்
நியு சிற்றி கோழிக்கடை
இல.08, சின்னக்கடை மார்க்கெட், குருநகர். யாழ்ப்பாணம்.

(CS 51999) A-1

## வேலை வாய்ப்பு

நொதேண் சென்றல் வைத்தியசாலையானது மருத்துவ தேவையுள்ள மக்களுக்கு உயர்வான நோயாளர் பராமரிப்பினை வழங்கிக் கொண்டிருக்கும் வடமாகாணத்தின் மிகப் பெரிய அதி நவீன தனியார் மருத்துவ நிறுவனமாகும்.

நாங்கள் பின்வரும் பதவிகளுக்குத் திறமையான மற்றும் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றோம்.

| | பதவி நிலைகள் | அடிப்படைத்தகுதிகள் |
|---|---|---|
| 01. | உதவி முகாமையாளர் (இருபாலாரும்) | பட்டதாரி. குறித்த துறையில் 3 வருட முன் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது. |
| 02. | மருந்தகக் கொள்வனவு உதவியாளர் (இருபாலாரும்) | க.பொ.த. உ/தரம் வர்த்தகப்பிரிவில் சித்தி. கணினி பாவிக்கத் தெரிந்தவர் |
| 03. | கணக்கு உதவியாளர்கள் (இருபாலாரும்) | கணக்கியல் துறையில் பட்டம் பெற்றவர்கள் |
| 04. | BillingClerks/ Cashiers (இருபாலாரும்) | க.பொ.த. உ/தரம் வர்த்தகப்பிரிவில் சித்தி. கணினி பாவிக்கத் தெரிந்தவர் |
| 05. | பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலர்கள் (பெண்கள்) | க.பொ.த. உ/தரத்தில் சித்தி மற்றும் 30 வயதிற்கு உட்பட்டவர்கள். மும் மொழிகளிலும் தேர்ச்சியுள்ளவர்கள். கணினி பாவிக்கத் தெரிந்தவர் |
| 06. | வரவேற்பாளர்கள் (பெண்கள்) | க.பொ.த. உ/தரத்தில் சித்தி மற்றும் கணினி பாவிக்க தெரிந்தவர்கள். |
| 07. | தாதிய உத்தியோகத்தர்கள் (இருபாலாரும்) | B.Sc. Nursing or Diploma in Nursing |
| 08. | சாரதி (ஆண்) | கனரக. இலகுரக மற்றும் முச்சக்கர வண்டி சாரதி அனுமதிப்பத்திரம் அவசியம். |
| 09. | பராமரிப்பு ஊழியர்கள் (Attendant Staffs) இருபாலாரும் | தரம் 08 இல் சித்தி |

* விண்ணப்பதாரிகள் பகல் மற்றும் இரவு நேரக் கடமைகள் செய்யத் தயாரானவர்களாக இருத்தல் வேண்டும்.
* தெரிவு செய்யப்படுபவர்களின் திறமை மற்றும் அனுபவங்களிற்கேற்ப முன்னுரிமை வழங்கப்படும்.
* ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
* தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு திறமையின் அடிப்படையில் கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் சுயவிபரக்கோவையினை கீழ் தரப்பட்டுள்ள முகவரிக்கு தபால் உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவி நிலையினைக் குறிப்பிட்டு 10.09.2023 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அஞ்சல் செய்யவும். அல்லது northernhrm@gmail.com எனும் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.

**HR Department**
**Northern Central Hospital (Private) Limited**
**No: 342, Palaly Road, Jaffna.**
**Contact Number- 0771729988 /**
**E-mail: northernhrm@gmail.com**

(CS/40523)AH-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 11 . 1946



மறைவு 07 . 09 . 2023

### வைத்தியர் கதிர்காமு தர்மலிங்கம்

(S.K.DISPENSARY - நீர்வேலிச் சந்தி)

யாழ்ப்பாணம், நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்தியர் கதிர்காமு தர்மலிங்கம் (S.K.DISPENSARY - நீர்வேலிச் சந்தி) அவர்கள் நேற்று (07.09.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகனும், கதிரேவலு நாகமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், கௌரிதேவி அவர்களின் அன்புக் கணவரும், ஜெயமாலா (சுவிஸ்), ஜெயதீபன் (கனடா), ஜெயரூபா (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கண்ணன், நிலா, இரத்தினராஜ் ஆகியோரின் பாசமிகு மாமாவும், அற்புதராணி (கனடா), அருந்தவம் (கனடா), பரமலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், எழிலினியன், ஆரவி, கவின் ஆராதன், ஆருதி, ஆதனன் ஆகியோரின் அன்புப் பேரனும், பிலிப்ஸ், சிறிஸ்கந்தராஜா, ராதிகா, காலஞ்சென்ற யோகம்மா, சரவணபவன், வேலாயுதபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2023) வெள்ளிக்கிழமை அவரது வீட்டில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தகவல்:
ஜெயதீபன் (மகன்) 074 064 7821

(CS 26150) A-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள அவர்களது பணிமனையில் 08.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org